1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு மார்கழி மாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 49-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

கடந்த சிலதினங்களாகக் கடும்பனி பெய்கின்றது. மக்கள் அதனைத்தாங்க வாற்றாது கொடுகி விறைக்கின்றார்கள். மழைக்கோலம் அற்பமாகவே காணப்படுகின்றது. பனிக்கேற்றவெயில் உரமாய் எறிக்கின்றது.

### நீதிபதியின் மாற்றம்

யாழ்ப்பாண மஜிஸ்றேற்றாய் இருந்துவந்தவரான ஜி. தோமஸ் அவர்கள் காலி உதவிடிஸ்றிக் நீதிபதியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். வருகிற தைமாதம் 3-ந்திகதியன்று இவர் தமதுபுதிய உத்தியோகபதவியைக் கையேற்பார். இவரிடமாக யாழ்ப்பாண மஜிஸ்றேற்றாகத் திரு. பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் நியமனம்பெற்றிருக்கின்றார்.

### றெயின்வண்டி விபத்துவிசாரணை

சென்ற வெள்ளிக்கிழமை பரசங்கவீவாவுக்கும், மதவாச்சிக்குமிடையே நடைபெற்ற விபத்துச்சமபந்தமாய் விசாரணை செய்வதற்கென்று றெயில்வே ஜெனறல்மனேஜர் ஓர்விசாரணைக்கம்மிஷனை நியமிக்கவிருக்கின்றார். இந்தக்கம்மிஷன் உதவிஎஞ்ஜினியர்களைக்கொண்ட ஓர்சிறிய விசாரணைக்கமமிஷனாகவே இருக்கும்.

### கம்யூனிஸ்தர்களின் படுதோல்வி

மாத்தறைப் பட்டினசங்கதேர்தல் சென்ற 10-ந் திகதி சனிக்கிழமை நடைபெற்று, அதிலே கம்யூனிஸ்தர்கள் படுதோல்வி அடைந்திருக்கின்றார்கள். இதற்குமுன்னிருந்த மாத்தறைப் பட்டினசங்கத்தில் நிர்வாகஊழல் காரணமாகப் பட்டினசங்கம் சென்றசித்திரைமாதம் கலைத்துவிடப்படவே, விசேஷ கம்மிஷனர்ஒருவர் நியமனம்பெற்று, அதன் நிர்வாகத்தைஏற்று நடத்திவந்தார். அப்பட்டினசங்கத்தில் இடதுசாரிகளே பெரும்பான்மையினராய் இருந்தார்கள். ஆனால், சென்ற சனிக்கிழமை நடைபெற்றதேர்தலிலே கம்யூனிஸ்தகட்சி அபேட்சகர்களில் ஒரேயொருவர்மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர்களாகத் தேர்தலுக்குநின்ற பத்துப்பேருள் ஒன்பதுபேரும் வெற்றிபெற்றார்கள், மற்றும்ஒருவர்சுயேச்சை அபேட்சகராகநின்று வெற்றிபெற்றார். மாத்தறைப் பட்டினசங்கம் பதினொரு வட்டாரங்களை அடக்கியுள்ளது.

### றெயின்வண்டிப் பாதுகாப்பு

கொழும்பு – யாழ்ப்பாண றெயின் வண்டிகளில் பிரயாணஞ் செய்கிறவர்களுக்குப் பாதுகாப்பாய் இருக்கும் பொருட்டு அவற்றிலேகடமையாற்றும் பாதுகாப்புப்படையினரின் தொகை வழமையிலும்பார்க்க இப்போது அதிகமாக்கப்பட்டுள்ளது. சென்றவெள்ளிக்கிழமை கொழும்பு – யாழ்ப்பாண றெயிற்பாதையில் நேர்ந்தவிபத்தைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### புத்தசமயத்தவர் ஆக்கவேண்டும்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் சென்றசனிக்கிழமை உடுகமத்தில்நடந்தேறிய பொதுக்கூட்டம் ஒன்றுக்குச் சமுகமளித்தார். அதிலே புத்தஜயந்திக்குமுன்பே கவர்னர்–ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலக அவர்களைப் புத்தமதத்துக்கு மாற்றிவிடவேண்டுமென அவருக்கு ஓர்வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ்வேண்டுகோளைவிடுத்தவர் கூறியதாவது: இது பிரதமராலேசெய்யமுடியாத ஓர்காரியமன்று; ஏனெனில், அவர் பிரதமரான குறுகியகாலத்துள் புத்தசமயத்துக்கு எவ்வளவோசேவை செய்திருக்கின்றார் என்றார். அதற்குப் பிரதமர் அளித்தபதிலிலே, மக்களைப் பெயரளவில் புத்தர்களாக்குவதில் அர்த்தமில்லையெனக் கூறலாயினர்.

### றெயில்வேப் பெருவிபத்து

சென்றவெள்ளிக்கிழமை பகல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த றெயின் வண்டி பரசங்கவீவாவுக்கும், மதவாச்சிக்குமிடையே பயங்கர விபத்துக்குள்ளாயிற்று. அதனால் சாமான் வண்டிகளுள்பல துகள்துகளாகச் சிதறிப்போயின. ஆனால், பிரயாணிகளின் வண்டிகள் பாதையைவிட்டு விலகியபோதிலும் அவற்றிற்காவது, பிரயாணிகளுக்காவது சேதமோ, காயமோ ஏற்படவில்லை. இந்தவிபத்தாலே ஏறக்குறைய நூறுயார்நீளமானபாதை சேதமடைந்து இப்போது புதிதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்பட்டுள்ள சேதமதிப்பு சுமார் இருபதினாயிரம்ரூபா வரையிலாகும். இவ்வளவுபெரியவிபத்து ஏற்பட்டிருந்தும் பிரயாணிகளுள்எவராவது காயமடையாததற்குக்காரணம், இப்போது உபயோகிக்கப்பட்டுவரும் உருக்கினாற் செய்தவண்டிகள் கடுமையான அதிர்ச்சியின்போதும் உடைந்துவிடாமல் நிமிர்ந்துநிற்கக் கூடியனவாய் இருப்பதேயாகும். இன்னும் இந்தவிபத்துக்கு நாசவேலை காரணமல்லவென்று றெயில்வே மனேஜர் தெரிவித்திருக்கிறார்.

### துப்பாக்கி லைசென்ஸ்கள்

லைசென்ஸ்கள் வழங்கப்படும் துப்பாக்கிகளின் தொகையைக் குறைக்க உள்நாட்டுமந்திரி காரியாலயம் உத்தேசித்துள்ளது. தற்போது இலங்கை முழுவதிலும் லைசென்ஸ்கள் பெற்றவைகளாய் ஏறக்குறைய இருபதினாயிரம் துப்பாக்கிகள் இருந்துவருகின்றன. இவற்றில் அரைவாசிக்குத்தான் இனிமேல் லைசென்ஸ்கள் வழங்கப்படவிருக்கின்றன, அதனால், லைசென்ஸ் புதுப்பிக்க விண்ணப்பஞ்செய்வோர் போதிய நியாயம் காட்டவேண்டும்.

### மலையாளப் புகையிலைவியாபாரம்

புத்தூரில் அன்றுநடைபெற்ற கூட்டம்ஒன்றிலே ஆவரங்கால் கிராமாபிவிர்த்திச் சங்கதலைவரும், மலையாளப் புகையிலைவியாபாரத்தில் தொடர்புடையவருமான திரு. கே. சிவகுருஅவர்கள் மலையாளப்புகையிலை வியாபாரநிலைமையை விளக்கிப்பேசி, அதற்கு உதவிசெய்யும்படி கைத்தொழில்–சமூகசேவா–வீடமைப்பு மந்திரியாரான சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களைக் கேட்டுக்கொண்டார். அதற்குமந்திரியார் அளித்தபதில்வருமாறு: "இந்தியா உள்நாட்டுப் புகையிலைச்செய்கையை விருத்திசெய்வதன்மூலம் வெளிநாட்டுப் புகையிலை இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்திலேகண்ணுங்கருத்துமாக உழைத்துவருகின்றது. 1957-ம் ஆண்டுக்கிடையில் உள்நாட்டுப் புகையிலைச்செய்கையைக்கொண்டு சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ள முடியுமென்ற நம்பிக்கையுடன்தான் யாழ்ப்பாணப் புகையிலைஇறக்குமதிக்குத் தடைவிதித்திருக்கின்றது. இந்தியஅரசாங்கத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி 1957-ம்ஆண்டுடன் யாழ்ப்பாண–மலையாளப் புகையிலைவியாபாரம் நின்றுவிடும். யாழ்ப்பாண–மலையாளப் புகையிலைவியாபாரத்தை நீடிக்கப்பண்ண இலங்கைஅரசாங்கம் ஒன்றுஞ்செய்ய முடியாது. அதனால் யாழ்ப்பாணத்திலே புகையிலைசெய்கிறவர்கள் அதற்குப்பதிலாக வேறுபலன்தரும் பயிர்களைச்செய்து தங்கள் வாழ்க்கையை நடத்த முன்வரவேண்டும். எமது நாட்டுக்குவேண்டிய உணவுப்பொருட்களைச் செய்கைபண்ணுவதிலே யாழ்ப்பாணக்கமக்காரர் கவனஞ்செலுத்த வேண்டும். அவர்கள் மலையாளப் புகையிலைவியாபாரத்தினால் அதிகலாபம் அடைந்திருக்கிறார்கள். இப்படியான நிலைமையை 1957-ம்ஆண்டுக்குப்பின் எதிர்பார்க்கமுடியாது. ஆதலால், இன்றுதொடக்கமாகவே வேறுபயிர்வகைகளைச்செய்து பொருளாதாரத்தைப்பெருக்க முயற்சிக்கவேண்டும். இந்தியமக்கள் உள்நாட்டுப் புகையிலைச் செய்கையுமே வெளிநாட்டுப் புகையிலைஇறக்குமதியைத் தடைசெய்ய முன்வரும்போது நாம் ஒன்றுஞ்செய்துகொள்ள முடியாது" என்பதே.

### புத்தகுரு கூறுகின்றார்

சென்ற ஏழுவருடகாலமாக நான் சமசமாஜகட்சியை ஆதரித்துவந்தவன்; சமசமாஜிகளின் ஆதிக்கத்திற்காக நான் ஆக்கட்சியில் உழைத்துப் பலமுறை சிறைசென்றிருக்கிறேன்; ஆனால், மொழிப்பிரச்சினையை முன்னிட்டு நான் இப்பொழுது அக்கட்சியிலிருந்து விலகியிருக்கிறேன்; அக்கட்சி சிங்களத்துக்கும், தமிழுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்படவேண்டுமென்று கேட்பதால் நான் அக்கட்சியை விட்டு விலகியிருக்கிறேன்; கம்யூனிஸ்தகட்சிக்கும், சமசமாஜகட்சிக்கும் மொழிப்பிரச்சினை சாமணிஅடித்திருக்கிறதென்று நுகேகொடையில் மொழிப்பிரச்சினைவிஷயமாய்ச் சென்ற 7-ந் திகதியன்று நடைபெற்ற ஓர்பொதுக் கூட்டத்தில் ஞானிந்த நாயகதேரோ என்னும் புத்தகுரு பேசியிருக்கின்றார். மொழிப்பிரச்சினைபற்றி அவர் பேசியதல்ல, ஆனால், சமசமாஜ கட்சியில் சேர்ந்து, அக்கட்சியின் ஆதிக்கத்திற்காக உழைத்துவந்திருப்பதாய் அவர் பேசியதே ஆச்சரியந்தருவதாகும்.

### களவிலே போன புடவைகள்

வடஇலங்கைக்கரையிலிருந்து இந்தியாவுக்குச் சென்றசெவ்வாய்க்கிழமை களவிலேஓர்கட்டுமரத்தில் கொண்டுபோகப்பட்ட 21,000 ரூபா பெறுமதியான மிகத்திறமான புடவைகளும், மற்றுஞ்சாமான்களும் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த மூவருடன் நடுக்கடலிற் கண்டுபிடித்துக் கைப்பற்றப்பட்டன. தங்களுக்குக்கிடைத்த தகவலின் பேரிலே பருத்தித்துறையைச்சேர்ந்த ரேகு–கடற்படை அதிகாரிகள்இருவர் இருமோட்டர் வள்ளங்களில் விரைந்து சென்று கட்டுமரத்தைக் கண்டுபிடித்தனர். அதிலே முன்சொல்லப்பட்ட சாமான்கள் ஆறுமூடைகளாகக் கட்டப்பட்டிருந்தன. பின்னர் உதவிக் கலெக்றர் நடத்திய விசாரணையின்முடிவாய் இராமநாதசாமி, குமாரகுரு, இராசையாஎனும் மூவருக்கும் ஆயிரம்ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. 21,000 ரூபா பெறுமதியான புடவைகளும், பிறவும்பறிமுதலாயின.

**சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட ஒல்லாந்து

—: வண. டி. எஸ். ஞார்துசாமி சுவாமிகள் :—

(சென்றவாரத் தொடர்ச்சி)

நாடு நிலவளம்மிகுந்தது. எங்கும் பச்சைப் பசேலெனப் பசுங்கம்பளம் போர்த்தாற்போன்றதோற்றம். பசுமை கொழிக்கும் காட்சி. அப்பசுமையோ ஒருதனிப்பட்ட பசுமை. நிலவளம் அதிலே மிளிர்ந்து பிரதிபலிக்கின்றது. ஹார்லம்நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள பரந்த அழகியபூவயல்கள் கண்ணைப்பறிக்கின்றன. மிதவெப்ப நிலையைத்தரும் கண்ணாடி வீடுகளில்வளரும் செடிகொடி வகைகளைச் சர்வசாதாரணமாகக்காணலாம். ஆங்காங்கு காற்றாடியந்திரங்கள் (Windmills) சிலவும் காணக்கிடக்கின்றன.

ஆம்ஸ்றர்டாம், றோட்டர்டாம், டென்ஹாக், உட்றெக்றஎன்பன ஒல்லாந்தின நாற்பெருமநகரங்கள். நாட்டின்தலைநகரமாக விளங்குவது ஆம்ஸ்றர்டாம். இதன்மக்கள்தொகை ஒன்பதுலட்சம்பேர். மிகப்பழமைவாய்ந்த நகர். எனவே, வளைந்துவளைந்துசெல்லும் குறுகியதெருக்களைக் கொண்டுள்ளது. இந்நகரின் சிறப்பான அம்சம் அதன் குறுக்கே நெடுக்கேசெல்லும் 17 நீண்ட, அகன்ற கால்வாய்கள். இக்கால்வாய்களின் வழியாக உல்லாசமாக மோட்டர்ப்படகில் சென்று, நகர் முழுமையும் கண்டுகளித்துவருவது வாழ்வில் மறக்கமுடியாத அனுபவமாகும். இக்கால்வாய்களின் நீர் தினந்தினம் புதுப்பிக்கப்படுகின்றது. எனவே, அவைகள் வெகுசுத்தமான நீர்த்தேக்கத்தைக் கொண்டுள்ளன. அவற்றின்மீது நகரின் பல்வேறுபகுதிகளில் 400 பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசில "இழுபாலங்கள்" (Drawbridges). பெருங்கப்பல்கள் கால்வாய்கள்வழியாக வருகையில், இத்தகையபாலங்கள் நொடிப்பொழுதில் உயர்ந்து எழுந்து நிற்கின்றன. கப்பல்களைக் கடக்கவிட்டு மீண்டும் படுத்துக்கொள்கின்றன.

குறுக்கே நெடுக்கேசெல்லும் கால்வாய்களால் நகரம் நூறுதீவுகளாகத் துண்டுபோடப்பட்டிருக்கின்றது. இத்தாலியிலுள்ள வெனிஸ்நகரைப்போல் நீர்மீதுமிதக்கும் ஒருநகரமாக இதுவும் காட்சியளிக்கின்றது. கால்வாய்களின் இருமருங்கிலும் ஆங்காங்கு அழகிய பெரும் உணவுசாலைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் உல்லாசப்பிரயாணிகள் திரண்டுவந்து குவிந்து காற்றோட்டமான குளிர்ந்த நீர்நிலைகளுக்கண்மையில் அமர்ந்து உண்டுமகிழ்கின்றனர். லண்டன்நகரைவிட ஆம்ஸ்றர்டாம்நகருக்கு அதிகமான வெளிநாட்டுமக்கள் வந்துபோவதாகத் தெரிகிறது. ஒல்லாந்தநாட்டின் ஷிப்ஹோல் என்ற மிகப்பெரிய அழகிய விமானநிலையம் நகரிலிருந்து எட்டுமைல் தூரத்தில் அமைந்துள்ளது. அந்தஇடம் கடல்மட்டத்திலிருந்து பத்துக்கெசம் தாழ்வானது.

இரண்டாவது பெரியநகரம் றோட்டர்டாம். இந்நகர்வாழ்மக்கள் மொத்தம் 7 லட்சம்பேர். றைன்நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள —மிகுந்த கப்பல்போக்குவரத்துள்ள இத்துறைமுகப்பட்டணம் உலகப்பிரசித்திபெற்றது. பலநாட்டுக்கப்பல்கள் நூற்றுக்கணக்கிலே இங்கு நங்கூரம்பாய்ச்சி நிற்கின்றன. சென்ற மகாயுத்தகாலத்திலே (1940) இந்நகர் — சிறப்பாக இதன் மத்தியபகுதி குண்டுவீச்சால் நிர்மூலமாக்கப்பட்டது. அதை நினைவுறுத்துமாறு இருதயமும், குடலும் பிடுங்கப்பட்டுள்ள மனிதனின்பாவனையாகப் பரிதாபகரமான தோற்றமளிக்கும் உருவச்சிலையொன்று ஆங்குஎழுப்பப்பட்டுள்ளது. பிரான்சிய சிற்பக்கலைவல்லுனர்ஒருவரால் ஆக்கப்பட்ட இந்த நினைவுச்சின்னத்தைக் காண்போர்அனைவரும் அதைப் போற்றிப் புகழ்கின்றனர். யுத்தத்தால் பெரிதும் சேதமுற்ற றோட்டர்டாம்நகர் விரைவிலே புத்துயிர்கொண்டெழுந்து, ஓர் அழகிய நவீனநகராக விளங்குகின்றது. அமெரிக்காவில்போன்று பிரமாண்டமான புதுவகைக்கட்டடங்கள் இங்கு நாளுக்கொன்றாக எழும்பியவண்ணம் இருக்கின்றன.

டென்ஹாக் (Den Haag) அல்லது தி ஹேக் (The Hague) என்பது ஒல்லாந்தின் மூன்றாவது பெரியநகரம். நாட்டின்தலைநகர் ஆம்ஸ்றர்டாமெனினும், பாராளுமன்றம், வெளிநாட்டு ஸ்தானீகர்களின் இருப்பிடம்முதலிய அரசாங்க காரியாலயங்கள்யாவும் டென்ஹாக்என்ற இந்நகரில்தான் இருக்கின்றன. நாட்டின்செல்வந்தருள் பெரும்பாலோர் இந்நகரிலும், இதன் சுற்றுப்புறங்களிலுமே வசிக்கின்றனர். கடற்கரையும் சற்று அண்மையிலுள்ளது. இடையிடையே அழகிய பெருந்தோப்புகளும், சிறுகாடுகளும் உள்ளன. உலகப்புகழ்பெற்ற லெய்டன் பல்கலைக்கழகமும் இந்நகருக்கு அருகில்தான் இருக்கின்றது. ஸ்பானியபடைகளை எதிர்த்து வீரப்போர் புரிந்த லெய்டன் நகரின்மக்களைக் கௌரவிக்க 1575-ம்ஆண்டு 'ஒறேஞ்சின் வில்லியம் இளவரசரால் (Prince William of Orange) கொடையாக வழங்கப்பட்ட பல்கலைக்கழகம் இது. லெய்டன் ஒருகாலம் ஒல்லாந்தின் இரண்டாவது பெரியநகரமாக விளங்கிற்றும். பொற்காலத்தைச்சார்ந்த நினைவுச்சின்னங்கள் பலவற்றை இன்றும் அங்குகாணலாம்.

உட்றெக்றஎன்பது சிறப்புவாய்ந்த இன்னொரு பெரியநகரம். இதை ஒல்லாந்தின் கத்தோலிக்க தலைநகரம் என்று அழைக்கலாம். இந்தியாவுக்குப் போலவே ஒல்லாந்துக்கும் கருதினல் ஆண்டகைஒருவர் இருக்கின்றார். அவர் இந்நகரின் அதிமேற்றிராணியாராவர். இதுவரைஇருந்துவந்த கருதினல்ஆண்டவர் சென்ற புரட்டாசியில் காலஞ்சென்றுவிட்டார். எனவே, தற்காலிகமாக அவரதுஸ்தானம்காலியாயிருக்கின்றது. பிரித்தானியைப்போலவே ஒல்லாந்தும் முடியாட்சியை உடையது. இன்று அரியணையில் அமர்ந்திருக்கும் அரசி ஜூலியானா, ஷூஸ்டெக் (Schusdech) எனும் இடத்திலுள்ள புதுமாளிகை ஒன்றில் வாசம்செய்கின்றார். ஆண்டுக்கொருமுறை—அஃதாவது புரட்டாசிமாதத்தின் மூன்றாவதுவாரத்திலே ஆடம்பரமானபவனியுடனும், பரிவாரச்சிறப்புடனும் டென்ஹாக்நகரிலே பாராளுமன்றத்தைத்திறந்துவைக்கின்றார். இத்திறப்புவிழா ஒல்லாந்தின் பேரான பெருவிழாவாகும்.

(தொடரும்)

# தமிழ் வல்லுநரான வீரமாமுனிவர்

—: ஆடகமணி :—

தொல்காப்பியம் கருக்கொண்டது. முச்சங்கத்துப் பாடல்கள் அங்கமாயின. தமிழன்னை காட்சியளித்தனள். இளங்கோவின் மணிச்சிலம்பு அன்னையின்சீறடியில் கலீர்கலீர்என்று ஒலித்தது. சிலம்பின் எதிரொலியால் மணிமேகலை புனைந்தனள்அன்னை. சிந்தாமணி பாதங்களிற் பணிந்தது. காதில் வளை செறிந்தது. குண்டலமும், கேசியும் ஒன்றாய்ஆடி நடங்கின. காவியங்கள் சொட்டின. பிரபந்தமலர்கள் முறுக்கவிழ்ந்தன. தாய்மையே உருவானாள் தமிழ்அன்னை. முறுக்கவிழாக் கன்னிமாலைசூட்டி அன்னையைக் கன்னியாக்க விரும்பினார் ஒருதுறவி. ஏன்? துறவிக்கு ஏன் இக்கருத்து உதயமாயிற்று? துறவியின் சமயபாரம்பரியம் அது. மரியாள் மாதா. ஆம், அவளே கன்னிமரியாள். மரியாள் அன்னையுமானாள், கன்னியுமானாள். தமிழ்அன்னையின் காட்சி துறவியின் மனதை ஈர்த்தது. வாடாதமலர்மாலையைச் சூட்டினார். அன்னையின்தோற்றம் கன்னியாகமாறித் தோன்றியது. தமிழன்னையும் கன்னியானாள். தமிழன்னையைக் கன்னியாக்க வாடாமலர் மாலை சூட்டிய தவப்புதல்வன் யார்? வீரமாமுனிவரே.

## கத்தோலிக்க துறவி

வீரமாமுனிவர் உண்மையில் ஒரு ஐரோப்பியர். இத்தாலிய தேசத்தவர். உத்தம கத்தோலிக்க துறவி. நடையிற் தமிழ்மகன். உடையிற் தமிழ்மகன். பண்பட்ட தமிழ்மகன். தண்டமிழ் ஆசான். மறைமொழி வாயினன். மலிதவத் திறைவன். நிறைமொழிக் குரவன். நிகரில் கேள்வியன். காப்பியக் கவிஞன். இலக்கணப்புலவர். வசனஎழுத்தாளர். தமிழ்வளர்த்த தந்தை. எழுத்துத் திருத்திய வித்தகர்.

இவர் தமிழ்நாட்டிற் பிறக்கவேண்டியவர். இசைவளர்ந்த நாடுவிரும்பி இத்தாலியநாட்டிற் பிறந்தார்போலும். இசைமொழியில் வளர்ந்த இளந்துறவி இயற்றமிழில் வல்லுநரானார். பாரதநாட்டில் கால்வைத்ததும் தமிழ்கற்க முனைந்தனர். இவரின் ஆசிரியர் சுப்பிரதீபக் கவிராயர். உற்றுழி உதவிக் கற்றார். பிற்றைநிலை முனியாது கற்றார். உறுபொருள் கொடுத்து நறும்பொருள் கற்றார். தமிழில் வித்தகரானார். பத்துவருடங்களில் தமிழ்மொழியின் கரைதுறைகண்டனர். 1726-ம் ஆண்டில்—அஃதாவது நாற்பத்தாறுவது வயதில் "தேம்பாவணி"யென்னும் காவியத்தை இயற்றியருளினார். இஃது 36படலங்களையும், 3,615செய்யுள்களையுமுடையது. தொண்ணூறுக்குமேற்பட்ட சந்தபேதங்களை யுடையது.

முதன்முதலில் தமிழ்அகராதி கண்டவர் இவரே. இது சதுர்அகராதி எனப்படும். தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலைச் சூத்திரங்களால் யாத்தனர். வசன நூல்கள்பல எழுதினர். அவற்றுள் பரமார்த்தகுரு கதை உலூத்தர்சபைக் கிறித்தவர்களைக் கிண்டல்பண்ணும் கேலிக்கதைகள் பொதிந்தது.

இவரின் திருக்காவலூர்க் கலம்பகம் சொல்லணி பொருளணி மிக்கது. அருள் நிறைந்தது. பலஅரிய துறைகளையுடையது. அருகிய வழக்குகளை எடுத்துக்காட்டுவது.

தமிழ்நாடு போற்றும் திருக்குறளை இலத்தீன் மொழியினில் செய்யுள்வடிவில் மொழிபெயர்த்துள்ளார். பன்மொழிப்புலவராய்-விளங்கினார். பிரான்சியம், போர்த்துக்கீசம், இசுப்பானியம், கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பாரசீகம், இந்துஸ்தானி, தெலுங்கு, தமிழ்என்ற பலமொழிகளைக் கற்றுத் தேறியவர்.

அந்நியநாட்டினராயிருந்தும் தமிழன்னைக்குச் செய்தசேவையின்காரணமாக இவரைத் தமிழ்மக்கள் பெரிதும் போற்றுவர். இவர் சமயங்கருதி வெறுப்பாருமிலர். சுத்தானந்த பாரதியார்பாடிய பாடல்மூலம் காட்டுதும்.

**வீரமாமுனிவர் தைரியநாதர்**
**விரிதமிழ்க் கலைமணங்கமழும்**
**ஆரமாமுனிவர் அகத்தியர்போல**
**அருளினார் அரியநன்னூல்கள் [ னுந்**
**சாரமாந்தேம்பா வணியினைத் தொடி**
**தமிழ்மணங் கமழுமென்கரமே**
**ஈரமாநெஞ்சில் இடம்பெற நட்டால்**
**இன்பமாய் மலருமென் வாழ்வே.**

முனிவர் அவர்கள் தேம்பாவணியைச் செய்வதன்முன்னர் தமிழ்க்கலை நலமெலாம் கண்டுணர்ந்து, கல்லாதநூல் ஒன்றுமில்லையெனும்படி எல்லாத் தமிழ் நூல்களையுங் கற்றார். திருக்குறட் கருத்துக்களைப்புத்தியிலிருத்தி, சிந்தாமணியைச் சதாசிந்தித்து, மணிமேகலையைப்போர்த்து, கம்பனை அங்கையிற் பற்றி, சிலப்பதிகாரத்தை வதனதிலகமாகவைத்து,தேவார திருவாசகங்களை மலராகச்சூடி, பண்டைத்தமிழ்ப் புலமைசான்ற சங்கப்புலவர்போல் தமிழ்ப் பண்பும், பயனும் ஒருங்கமைத்துப் பங்கமில் நூல்பல செய்தனர் வீரமாமுனிவர்.

---

● போட்டோறிக்கோ நாட்டைச் சேர்ந்த அகுவாடாநகரில் வசிப்பவரான திரு. சொயிலோ சோட்டோமேயர்என்பவர் கடந்த 50ஆண்டுகளாகச் சுரூபங்கள்செய்யும்வேலையில் ஈடுபட்டிருக்கின்றார். ஆனால், இவர் தமக்குக் கனவிலே அருளப்பட்ட ஓர் தேவ கட்டளையாக நம்பித் தாம் செய்யும் கிறீஸ்துநாதரின் சுரூபங்களை விலைக்குக் கொடுப்பதில்லை. இனமாகவே கொடுத்துவிடுகின்றார்.

● போட்டோறிக்கோ நாட்டிலே வருடந்தோறும் கிறிஸ்மஸ்பண்டிகை காலத்திலே சங்கீதவித்வான்கள் கூட்டங்கூட்டமாக அந்நாடெங்கும் சுற்றித்திரிந்து ஸ்பானிய கிறிஸ்மஸ்கீதங்களையும், கறோல்களையும், ஸ்பானிய-அமெரிக்க கிறிஸ்மஸ் - கறோல்கீதங்களையும் பாடியாடிக் கிறிஸ்மஸ்சுபகாலத்தைப் பரிமளிக்கச்செய்யும் வழக்கமுடையவர்களாய் இருந்து வருகிறார்கள்.

● ஐக்கிய அமெரிக்கதேச பிற்ஸ்பேக் நகரில்வசிக்கும் திரு. ஜோண் ஹின்னே புஷ்ச் என்பவரின் பத்துப்பிள்ளைகளில் ஏழுபேரும் தொமினிக்கன் சபைத்துறவிகளாய் இருந்துவருகிறார்கள். புத்திரரில் நால்வர் குருமாராயும், புத்திரிகளில்மூவர் கன்னியாஸ்திரிமாராயும் இருக்கின்றார்கள். இவர்களின் மாமன்மார்இருவர் குருமாராயும், ஓர்சிறியதாய் கன்னியாஸ்திரியாயும் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரியகொறெற்றியின் சகோதரர்

அர்ச். மரிய கொறெற்றியின் சகோதரரான ஆஞ்செலோ கொறெற்றிஎன்பவர் சமீபத்திலே வாக்குத்தத்தங்கொடுத்துப் பாத்திமாநாயகியின் நீலச்சேனையில ஒருவராகச் சேர்ந்திருக்கின்ருர். இந்தவைபவம் வாஷிங்ரன் நகரிலே அச்சேனையின் தலைமைஸ்தானத்தில் நடைபெறலாயிற்று. 66 வயதுடையவரான திரு. ஆஞ்செலோ கொறெற்றி தற்போது ஐக்கிய அமெரிக்க தேச நியூஜேர்ஸியைச்சேர்ந்த நியூவிலேஜ் எனுமிடத்தில் வசித்துவருகின்ருர். நீலச்சேனை என்பது ஞானேபாயங்களை மேற்கொண்டுஉலகசமாதானத்துக்காகப் போராடுதற்கென்று அர்ப்பணஞ் செய்யப்பெற்ற ஓர் ஸ்தாபனமாகும். ஓர் மில்தொழிலாளியாயிருந்து தற்போது இளைப்பாறியிருக்கும் திரு. ஆஞ்செலோ கொறெற்றிஎன்பவர் அர்ச். மரியகொறெற்றி 12 வயதிலே தனதுகற்பைக் காப்பாற்றுவதற்காகக் கொலையுண்டபோது 14 வயதுடையவராய் இருந்தார். நீலச்சேனைஸ்தாபனத்தில் திரு. ஆஞ்செலோ கொறெற்றி சேர்ந்துகொண்டமையாலே, உலகசமாதானத்துக்காகப் பாத்திமாநாயகி ஆசித்துக் கேட்டவைகளை — அதாவது தினமும் செபமாலை செபித்தல். நாளாந்தகடமையிலே தற்பரித்தியாகங்கள் செய்தல், கார்மேல் உத்தரியத்தின் மூலமாக நேர்ந்துஒப்புக்கொடுத்தல் என்பவைகளை —நிறைவேற்றுவதாக வாக்களித்தவர்களாய் உலகமுழுவதிலுமுள்ள 33 நாடுகளிலே இருந்துவருகின்ற 50 லட்சத்துக்கு மேற்பட்டமக்களில் ஒருவராயினர்.

### சீனவும் கத்தோலிக்கசமயமும்

சீனதேச அமோய்நகர் மேற்றிராணியாராயிருந்துவந்து சிலகாலத்தின்முன் அங்கிருந்தும் நாடுகடத்தப்பெற்றவரான ஜுவான் வெலாஸ்கோமேற்றிராணியார் தற்போது பிலிப்பைன்ஸ்நாட்டின் தலைநகரான மனிலாநகரிலே சஞ்சரித்துவருகின்ருர். "தற்சமயம் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற இறந்தபோராகிய கடும்வேதகலாபனையிலே நின்றுபிடிப்பதற்குச் சீனவிலே கத்தோலிக்கசமயம் போதியஆழமாக வேரூன்றியிருக்கிற" தென இவர் அபிப்பிராயந் தெரிவித்திருக்கின்ருர். சீனவிலே 18 வருடகாலம் சமயதொண்டாற்றியபின் 44 வயதுடையவரான இந்தமேற்றிராணியார் சீனக்கம்யூனிஸ்தர்களால் அங்கிருந்தும் நாடுகடத்தப்பெற்றனர். தற்போது இவர் மனிலாநகரிலே 15,000 சீனக்கத்தோலிக்கரின் விக்கார் ஜெனறலாக இருந்துவருகின்ருர்.

# பாப்பரசரின் சுகநிலை

பரிசுத்தபாப்பரசர் சகல தோற்றத்திலும் தம்மைப்பீடித்திருந்த ஆபத்தான நோயிலிருந்து புலப்படத்தக்க விதமாக— பிரமிக்கத்தக்கதென்று சொல்லக்கூடிய தன்மையாக ஆரோக்கியம அடைந்திருக்கிருர். அவருடைய சரீரபலம், சகிக்கும் தன்மை, நிர்வாகசத்துவம், அவரது உல்லாசநடை, அபிநயங்கள் ஆதியனவெல்லாம் அவர் வருகிற பங்குனிமாதம் 80வயதுடையவர் ஆவாரென்பதைப் பொய்ப்பிக்கின்றன. அவரது மனேபலம், ஞாபகசக்தி, சாவதானம், உற்சாகம், வேலைசெய்வதிலே அவருக்குள்ள தகமை, நுணுக்கிஆராயுந்திறன், மலைப்பான விஷயங்களில் மூதலாய்க் கலங்காது தெளிவாகச்சிந்திக்கும்சிறப்பு என்னும் அரியதத்துவங்கள் சிறிதேனும் குறைவுபடவில்லை. அவர் இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் இருந்ததுபோல் அத்துணை நல்லஆரோக்கியமுடையவராகக் காட்சியளிக்கின்ருர். காஸ்தெல் காண்டல் போவிலுள்ள தமது வேனிற்காலமாளிகையிற்போய்ச் சஞ்சரிக்கத்தொடங்கிய தினமாகிய சென்றஆடிமாதம் 30-ந் திகதி முதல் கார்த்திகைமாதம் 11-ந் திகதிவரையிலே 24 சொற்பொழிவுகளுக்குமேல் நிகழ்த்தியிருக்கின்ருர். இவற்றுள் அநேகம் ஆயிரக்கணக்கான வார்த்தைகளைக்கொண்ட நீடியசொற்பொழிவுகளாகும். மேலும் அவர் காஸ்தெல் காண்டல்போவிலே குறைந்தபட்சம் வாரம் இருமுறை பொதுப்பேட்டிகள் அளித்திருக்கின்ருர். இவற்றுள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய ஒருமணித்தியாலம் வரையில் நீடித்திருந்தன. இப்பேட்டிகளின்போது அவர் மாளிகைமுற்றத்திற்கு மேலாகத்தோன்றும் மேன்மாடி ஒன்றின்மேல் நின்று, அங்கு கீழேகுழுமியிருக்கும் பல்வேறுகுழுவினரையும் தனித்தனியே வாழ்த்திப் பிரான்சிய, இத்தாலிய, ஜேர்மனிய, ஆங்கில, ஸ்பானிய பாஷைகளிலும், சிலவேளைகளில் டச்சுப்பாஷையிலும் அவர்களுக்குச் சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கின்ருர். அவர்செய்துவரும் பணிகளை அவருக்குஇருப்பதாகச் சொல்லப்படும் பலவீனத்துடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துப் பொருத்தங்கண்டு கொள்வது கஷ்டமாயிருக்கிறது. அத்துடன் பெருந்தொகையான அந்தரங்கபேட்டிகளும், விசேஷபேட்டிகளும் அளித்திருக்கின்ருர். அம்மட்டா! முழுத்திருச்சபைப் பரிபாலனத்துடனும் சம்பந்தப்பட்ட பாரமான அலுவல்களிலே நேரமுழுவதும் ஈடுபட்டுவந்திருக்கின்ருர்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

### திருக்கல்லறை மகாலயம்

ஜெருசலேம்நகரிலே இரட்சகரின் திருக்கல்லறைக்குமேலாக நிறுவிநிற்கும் மகாலயமானது அவ்வப்போதுஉண்டான பூகம்பங்களால் வெகுவாகச் சேதமடையலாயிற்று. அதனுல், அது நெடுங்காலமாகச் சாரக்கட்டுகள்கொண்டு பாதுகாக்கப்பட்டுவருகிறது. தற்போது இந்தமகாலயத்தைத் திருத்திப் புதுப்பிக்கும்விஷயமாய் ஆலோசனைகூறும்படியாகப் பரிசுத்தநாட்டின் பாதுகாப்பாளரான பிரான்சிஸ்கன் சபையாரால் ஜெருசலேம்நகரிலே சர்வதேச சிற்பிகள்சமாஜம்ஒன்று ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. பிரான்ஸிய, பெல்ஜிய, ஸ்பானிய, இத்தாலியஅரசாங்கங்களும், பிரித்தானிய, ஐக்கிய அமெரிக்க, உலாந்த நாடுகளிலுள்ள பரிசுத்தநாட்டுக் கருமாதிகாரசபைகளும் தத்தம்பிரதிநிதிகளாகஒவ்வோர் அங்கத்தவரை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றன. இம்மகாலயத்தை முற்ருகத் திருத்துவது முடியாதாயினும் அதனைப்புதுப்பிக்குமிடத்துச் சாரக்கட்டுகளை அகற்றக்கூடியவகையிலே அதனைப்பலப்படுத்திவிடலாமென நம்பப்படுகிறது. மகாலயகட்டடத்தைச் சேமமே காத்துவைப்பதற்கான திட்டங்களை நிபுணர்கள் ஏற்கனவே செய்திருக்கிருர்கள்.

### தென்னுபிரிக்க மிஷன்பாடசாலைகள்

தனதுசர்வாதிகார ஆட்சிமுறையாலே பிரசித்திபெற்ற தென்னுபிரிக்க அரசாங்கம் "பன்ரு கல்விச்சட்ட" மென ஓர் நவீன கல்வித்திட்டத்தை ஆக்கியது. அதன்படி, மிஷன் பாடசாலைகளெல்லாம் அரசாங்கத்தினிடம் கையளிக்கப்படவேண்டியன. ஆனுல், அங்கு கத்தோலிக்கதிருச்சபை தனது மிஷன்பாடசாலைகளை அவ்வாறு கையளிக்க மறுத்துவிட்டது. அதனுல், அப்பாடசாலைகளுக்குக் கொடுபட்டுவந்த உதவிப்பணம் ஏற்கனவே நூற்றுக்கு 25 விகிதம் குறைக்கப்பட்டுவிட்டது. 1957-ம்ஆண்டின் இறுதியோடு இந்தஉதவிப்பணம் முற்ருகநிறுத்திவிடப்படும். அதனுல் அங்கு கத்தோலிக்க மிஷன் பாடசாலைகளைக் காத்துவைப்பதற்கான நிதிதிரட்டும் இயக்கம் ஒன்று சென்றபுரட்டாசிமாதம் 25-ந்திகதியன்று தொடக்கப்பட்டது. அந்நாட்டிலுள்ள கத்தோலிக்க உழைப்பாளர்களில் ஏறக்குறையக்காற்பங்குபேர் — அதாவது எண்ணுயிரம் ஆடவர்கள் தொண்டர்களாக வெளிகொண்டு வீடுகள்தோறுஞ் சென்று பணஞ்சேகரிக்கத் தொடங்கினுர்கள். சேர்க்கப்படவேண்டியிருந்தபணம் ஐந்து லட்சம்பவுண். ஆனுல், அவர்களின் முயற்சியால் ஒருமாதகாலத்துள் எதிர்பாராதவிதமாக ஆறுலட்சம்பவுண்வரையில் சேர்ந்துவிட்டது.

### மஸ்கோசெல்லும் குருவானவர்

சோவியற்ருஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோ நகரிலுள்ள அமெரிக்ககத்தோலிக்கரின் விசாரணைக்குரவராயிருந்தவண. ஜோர்ஜெஸ் பிஸ்னெற்றி சுவாமியாரைச் சோவியற்அரசாங்கம் இற்றைக்குஏறக்குறைய ஓர்ஆண்டின்முன் வெளியேற்றிவிட்டது. அதற்குக்காரணம், ஐக்கியஅமெரிக்க தேசத்திலே ருஷியபிரிவினைச்சபைத் தலைவரான போறிஸ் அதிமேற்றிராணியார் அங்கு தங்கியிருப்பதை நீடிக்கச்செய்ய அமெரிக்க அரசாங்கம் மறுத்துவிட்டமைக்குச் சோவியற்அரசு பதில்நடவடிக்கை எடுத்துக்கொண்டதேயாகும். பின்னர் வெளியேற்றப்பட்ட சுவாமியாரிடமாக வண. லூயிஸ் டியன்சுவாமியார் நியமிக்கப்பட்டார். இவர் மஸ்கோவிற்குச்செல்ல ஏழுமாதம் காத்திருந்து, கடைசியாக இப்போதுதான் ருஷிய அதிகாரிகளால் 'விசா' வழங்கப்பெற்றிருக்கிருர். இம்மாதஆரம்பத்திலே இவர் மஸ்கோவிற்குப் பிரயாணமாகவிருந்தார்.

### ஆசிரியையின் திருயாத்திரை

22 வயதுடைய ஓர் கனடிய ஆசிரியையான செல்வி மார்கறெற் கிறிவலின் எனும்மாது கையிற்பணமில்லாமலும், தனியஅப்பமும், தண்ணீரும்மாத்திரமே அருந்திக்கொண்டும் ஐரோப்பாவின் பிரதானதிருசேத்திரங்களைத் தரிசிக்கத் தொடங்கியிருக்கின்ருள். அவள் போகும் வழியிலுள்ள கன்னிகாமடங்கள் அவளுக்குஉணவும், தங்கஇடமும் அளித்துவருகின்றன. ஐரோப்பாவைத் தரிசித்து, அதன் யாத்திரைத்தலங்களில் செபஞ்செய்ய வேண்டுமென்று இளமையிற்கொண்ட ஓர்ஆவலின்பேரிலேயே அவள் இந்தயாத்திரையை நடத்துகின்ருள். பிரான்ஸ், போர்த்துக்கால், ஸ்பெயின், அயர்லாந்து முதலாம் நாடுகளைத்தரிசிக்க அவள் திட்டஞ் செய்திருக்கின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
மார்கழி மாதம் 15-ந் திகதி




# தேவ அழைத்தல்களின் வருடம்

## மேற்றிராணியாண்டவர் அவர்களின் திருமுகம்

கிறீஸ்துநாதரில் நமக்கு மிகவும்பிரியமான பிள்ளைகளே!

நத்தால்பண்டிகை நெருங்கிவரும் இந்தவேளையிலே உங்களுக்கு எமது மனப்பூர்வமான சோபனம் கூறுகிறோம். தேவபாலன் தமதுநிறைவான ஆசீர்வாதங்களைப் புத்தாண்டிலே உங்கள்மேல் பொழிந்தருள்வாராக!

அதிசீக்கிரத்தில் ஒருவருடம் முடிந்து, புதியதோர்வருடம் பிறக்கும். நாம் முன்னும்பின்னுமாக நோக்க வேண்டிய ஓர்சந்தர்ப்பம் இதுவாகும். பொதுவாக எமதுநாட்டிற்கும், சிறப்பாக எமது மேற்றிராசனத்துக்கும் தேவன்பொழிந்தருளிய எண்ணிறந்த ஆசீர்வாதங்களுக்காக அவரைத் தோத்திரிப்பதற்கு மாத்திரமல்ல, எமதுநாட்டில் தேவஇராச்சியத்தைப் பரப்ப நாம் எவ்வளவு பங்கெடுத்துக் கொண்டோமென்று ஆராய்வதற்கும் இது தகுந்ததோர் தருணமாகும். ஆத்துமாக்கள் மத்தியிலே தமது இராச்சியத்தைப் பரப்புவதில் நாம் ஒவ்வொருவரும் கருவியாய் இருக்க வேண்டுமென்பது தேவ நியமனம். மனந்திரும்புதல்என்பது சர்வேசுரன் இலவசமாகக்கொடுக்கும் ஓர்கொடையே. ஆனல், இப்பெருந்தொண்டில் எங்கள்ஈடுபாட்டையும், ஒத்துழைப்பையும் வெகுவாக அவர்விரும்புகிறார். வளரச்செய்வது தாமாயிருந்தாலும் நாம் நிலத்தைப் பண்படுத்திப் பயிர்நாட்டி நீர்பாய்ச்ச வேண்டுமென அவர்விரும்புகிறார்.

எங்கள் நாட்டில் சத்தியவேதம் போதிக்கப்பட்டு 450 வருடங்கள் ஆகின்றன. நமது தற்போதைய நிலைமைஎன்ன? எங்கள் மேற்றிராசனத்திலுள்ள 7,42,000 மக்களில் 85,000 பேர்மாத்திரமே கத்தோலிக்கராய்இருக்கின்றார்கள். கிறீஸ்துநாதர் இப்பூவுலகில்வந்து எல்லாமனிதருக்காகவுமே தமதுதிருஉதிரத்தைச் சிந்தியும் நூற்றுக்கு 89 விகிதமான எம் நாட்டுமக்கள் அவரை அறிவதுமில்லை, நேசிப்பதுமில்லை. சிலுவையிலிருந்து நாம் தாகமாயிருக்கிறேமென்று மனஉருக்கமாக அவர் ஓலமிட்டதும் இவர்களுக்காகவே. இந்தத் தாகஒலியைக் கடந்த நாலரைநூற்றாண்டுகளாக எம் நாட்டில் அவர் மீட்டும்மீட்டும் செய்திருக்கிறார். இத்தாகத்தை நாம் இன்னுமேதீர்க்காதது எமது குற்றமே. வேலையாட்கள் மிகவும் அரிதாய்இருப்பதினாலன்றோ! வயலிலே அறுவடை அற்பமாயிருக்கிறது. குருத்துவத்திற்கும், சந்நியாச, கன்னிகாசீவியத்திற்கும் தேவஅழைத்தல்களை ஆதரிக்குங் கடமையிலே எமதுபங்கை நாம்செய்யவில்லை. அறுவடையின் எசமானைப் போதியளவு வருந்திக்கேட்டோமில்லை.

அடுத்துவரும் ஆண்டினைத் தேவ அழைத்தல்களுக்கென ஆர்ப்பணஞ் செய்யும்படியாய் எமது ஆர்வமெல்லாங் கொண்டு உங்களை வினயமாகக் கேட்கின்றோம். "தமதுஉத்தியானத்திற்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் எசமானை மன்றாடுங்கள்" என்று எமதுஆண்டவர் வசனித்துள்ளார். நம்பிக்கையாயும், கடைப்பிடியாயும் நாம்கேட்டால் அதிகந்தீவிரமாகச் சர்வேசுரன் செவிசாய்க்கக்கூடிய விண்ணப்பம் இதைவிட வேறொன்றில்லை. திவ்விய பலிபூசைவேளையில் அவரைமன்றாடுவோம்! சற்பிரசாத ஆசீர்வாதவேளையில் இரந்துகேட்போம்! குடும்பசகிதமாய்ச் செபிக்கும் பொழுதும் வேண்டிக்கொள்வோம்! கிறீஸ்துநாதரை ஆத்துமாக்களுக்குக் கொடுப்பதாகிய இந்த அரும்பெருந் தொண்டிற்குத் தேவையான சிறந்த பத்திவேகமுள்ள — ஆத்துமவாஞ்சை நிறைந்த — அப்போஸ்தலர்களைத் தரவேண்டுமென்று பரலோகத்தை முற்றிகையிடுவதிலே குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், ஆசிரியர், பெற்றோர், விசேஷமாய்ச் சிறுபிள்ளைகளாகிய உங்கள்எல்லோரையும் எம்முடன் ஒன்றிக்கும்படி அழைக்கிறோம்.

உங்கள் குடும்பத்தில் குருத்துவத்திற்கோ, அலலது சந்நியாச, கன்னிகா அந்தஸ்திற்கோ ஓர் தேவஅழைத்தல் உண்டாகும்படி மன்றாட வேண்டுமென்று பெற்றோரே உங்களைக் கேட்கிறோம். ஓர்குருவானவரின் பிதாவாய் அல்லது மாதாவாயிருப்பது உங்களுக்கு எவ்வளவு பெரும்பாக்கியம்! நாள்தோறும் பூசைப்பலிவேளையில் உங்களை நினைவுகூரும்ஒருவர் இருக்கிறாரென்றுஅறிவது உங்களுக்கு எத்துணை ஆறுதலாயிருக்கும்! தேவஊழியத்திற்கு அர்ப்பணஞ் செய்யப்பெற்ற சீவியம் எவ்வளவு சிறப்பானதென்று உங்கள்மக்களுக்கு விளக்கிக்காட்டுங்கள். பீடத்தின் பரிசுத்த தேவதிரவியானுமானமாகிய சற்பிரசாதத்தின் மட்டிலும், அப்போஸ்தலர்களின் இராக்கினிமட்டிலும் உங்கள் இளைஞர் மனதில் உருக்கமானநேசம் நிலைபெறச் செய்யுங்கள். "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்."

இந்த மகத்தான தேவகைங்கரியத்தில் எமக்கு ஒத்தாசைபுரியும்படி நற்குணசீலர்களான எமது ஆசிரியர்சமூகத்தைக் கேட்கின்றோம். எமதுமந்தையின் ஆட்டுக்குட்டிகளைப் போஷிக்குங் கடமை உங்கள்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. எமதுநாட்டிலும், மேற்றிராசனத்திலும் திருச்சபையின் வருங்காலவிருத்தி நீங்கள்கற்பிக்கும் சிறுவர்களிலேயே தங்கியிருக்கின்றது. அவர்களும் உங்களையே எதிர்நோக்குகிறார்கள். உங்கள்சேவை மிகமேன்மையானது. விளக்கமான உங்கள்நன்மாதிரிகையும், கிறீஸ்துவஒழுக்கமும், பிறர்நலங்கருதும் சேவைப்போக்கும், தேவகாரியங்களில் நீங்கள் சிறுவர்களுக்கு ஊட்டும்பற்றுதலும் ஆதியனவெல்லாம் தங்களைச் சம்பூரணமாய்த் தேவசேவைக்குத் தியாகஞ்செய்ய அவர்களை ஏவிவிடக்கூடியன.

குறிப்பாக எமது மேற்றிராசனத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு நன்மதிகள் சில கூறவிரும்புகிறோம். அப்போஸ்தலர் கூறுவதுபோல, நீங்கள் "எமது மகிழ்ச்சியும், மகுடமு"மாய் இருக்கிறீர்கள். திவ்வியகர்த்தரின் விசேஷ பற்றுதலுக்கு இலக்கானவர்கள் நீங்கள். அவர் பூலோகத்தில் சீவித்திருந்த காலத்தில் சிறுவர்களைக் கட்டியணைத்தார். தமதுசீஷர்களுக்கு அவர்களை மாதிரியாகக் காட்டினார். அவர்களில் ஆகச்சிறியவர்களுக்கு இடறலாய் இருப்பவர்கள்மேல சாபமுழக்கஞ் செய்தார். கள்ளங்கபடமற்ற உங்கள் வெள்ளைமனதிலிருந்துவரும் வேண்டுதல்கள் சர்வேசுரனிடம் அதிக வல்லமை பொருந்தியன. ஆகையால், அருமைப்பெருமையான பிள்ளைகளே! தமது வேலையை இப்பூலோகத்தில் செய்வதற்கு அநேககுருமாரையும், சந்நியாசிமாரையும், கன்னியாஸ்திரிமாரையும்தந்து எமதுமேற்றிராசனத்தை ஆசீர்வதிக்கும்படி இடைவிடாமல் தேவனை மன்றாடுங்கள். அவருடைய சேவையிலே எமதுசீவியத்தைச் செலவழிப்பதைவிட மேன்மையும், உத்தமமுமானசேவை வேறில்லையென்று உணருங்கள். ஏனெனில், "அவரைச் சேவிப்பது உலகை ஆழ்வதாகும்." அவருடைய திருஊழியனாய் இருப்பதற்கு அவசியமான துணங்களை உங்கள் புத்திசித்தத்துக்குச் சர்வேசுரன் அருளியிருந்தால், "நீங்கள்போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள்கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான்உங்களைத் தெரிந்து ஏற்படுத்தினேன்" (அரு. 15 : 16) என்று தமதுசீஷருக்குச்சொன்ன இந்தவசனத்தை உங்களுக்கும் அவர் சொல்லவில்லையோஎன்று சிந்தித்துப்பாருங்கள். உலகமும், அதன்சுகபோகமும் அழிந்து அற்றுப்போனபின் குருவானவரின் ஊழியம் பரலோகத்தில் என்றும்அழியாமல் நிலைத்திருக்கும். ஆகையால், அவரைப்பார்த்து மன்றாடுங்கள். அவருடைய வழிநடத்துதலைக் கேளுங்கள். உத்தமவழிகாட்டியிடம் ஆலோசனைகேட்டு, நீங்கள் ஆதரிக்கவேண்டிய தேவஅழைத்தலின் விதைஒன்றை உங்கள்இருதயத்தில் அவர் விதைத்திருக்கிறாரோஎன்று உங்கள் மனதைச் சோதித்துப்பாருங்கள்.

யேசுக்கிறீஸ்துநாதரில் எமக்கு மிகவும்அருமையான பிள்ளைகளே!

அடுத்தவருடம் எமது மேற்றிராசனத்தில் தேவ அழைத்தலுக்கென நியமிக்கப்பட்ட வருடமாய் இருக்கவேண்டுமென நாம்ஆசிக்கிறோம். அநேகமான நல்ல—ஆத்துமவாஞ்சையுள்ள குருமார் எமக்குக்கிடைக்கும்படியாக அவ்வருடத்தில் காந்தலாய் மன்றாடுவோம். தேவஅழைத்தல்களை ஆதரிக்க எம்மாலானதெல்லாம் செய்வோம். இம்மாதம் 21-ந்திகதிபுதன் கிழமை எங்கள் மேற்றிராசனத்தில் நான்குதுருப்பிரசாதிகள் தங்கள்குருத்துவசீவியத்தில் 25 வருடசேவையின் நிறைவைக் கண்டுகொள்ளும் பாக்கியத்தை நாம் அடைந்துகொள்வோம். தேவஉத்தியானத்தில் 25வருடசேவை! அவர்கள் தாமேபெற்றுக்கொண்ட வரங்களும், பிறருக்குப் பெற்றுக்கொடுத்த வரங்களும் எத்தனை! பரித்தியாகங்கள் எத்தனை! நிறைவேற்றிய தேவதிரவிய அனுமானங்களின் எண்ணிக்கைதான் என்னை! மருதமடுமாதாவும், எமதுமேற்றிராசனத்தின் இராக்கினியுமான பரிசுத்த செபமாலைஅன்னையின் ஆதரவின்கீழ் தங்கள் தேவதொண்டுகளுக்கெல்லாம் தோத்திரமாக அவர்கள் இந்தப்பாக்கியமான சுபதினத்தை அத்திருப்பதியில் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றிக் கொண்டாடுவார்கள். தேவஅழைத்தல்களின் வருடத்தை ஆரம்பிப்பதற்கு இதைவிட உசிதமான — உத்தமமான தினம் வேறில்லையென்றே எண்ணுகிறோம். ஆனதுபற்றி நாம அருளிச் செய்வதாவது :—

1. தேவ அழைத்தல்களின் வருடம் எமது மேற்றிராசனத்தில் இம்மாதம் 21-ந்திகதி ஆரம்பமாகும்.
2. தேவஅழைத்தல்கள் பெருகும்படியாகத் திவ்வியபூசைவேளையில் பரிசுத்தஆவியானவரின் வரங்களைக் கேட்கும்செபம் "Deus Cui omme Cor Patet" கட்டளைச்செபமாகச் சொல்லப்படவேண்டும்.
3. தேவ அழைத்தல்களுக்காகக் குறிக்கப்பட்டிருக்கும் மேல்வருஞ் செபம் நாள்தோறும் திவ்வியபூசை முடிவிலும், சற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது "தாந்து மேர்க்கோ"வுக்கு முன்னும் சொல்லப்படவேண்டும்.
4. ஆசிரியர், பெற்றோர் சகிதமாய்ப் பாடசாலைப்பிள்ளைகள் கூட்டங்கூட்டமாக மருதமடுத்திருப்பதிக்கு யாத்திரைசெய்து தேவ அழைத்தல்களுக்காக அங்குசெபிக்கவேண்டுமென விரும்புகிறோம்.
5. தேவஅழைத்தல்களைப்பற்றி ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும், பாடசாலையிலும் கிரமமான பிரசங்கங்களும், போதனைகளும் நடைபெறவேண்டும்.
6. தைமாதம் 5-ந்திகதி தொடக்கம் 8-ந் திகதிவரையும் திவ்விய பாலக யேசுவின்பேரால் ஓர்விசேஷ திரிதினஆராதனை தேவ அழைத்தல்களுக்காக நடத்தப்பட வேணடும.
7. அழைத்தல்கள்சம்பந்தமான விசாரணைக்கடிதங்கள் யாவையும்,

"தேவஅழைத்தல் இயக்கத்தலைவர்,
மேற்றிராசன மாளிகை,
யாழ்ப்பாணம்."

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

* * *

## தேவ அழைத்தலுக்காகச் செபம்

தமது வேளாண்மைக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேளாண்மையின் எசமானை மன்றாடுங்கள் என்று எங்களுக்குப் படிப்பித்தருளிய திவ்வியயேசுவே! தங்கள் திருஊழியத்தினால் ஆத்துமாக்களுக்கு இரட்சணியத்தையும், உமது பிதாவுக்கு மகிமையையும் கொண்டுவரக்கூடிய அநேக பரிசுத்த குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரை உமது திருச்சபையிலும், விசேஷமாய் எங்கள் மேற்றிராசனத்திலும் பிறப்பித்தருள அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று தேவரீரை இரந்து மன்றாடுகிறோம்.

ஆண்டவரே! இப்போது உமக்கு முன்பாக முழந்தாட்படியிட்டிருக்கும் எங்கள் மத்தியிலுமிருந்து அவர்களிற் சிலரைத் தெரிந்தெடுக்கத் தேவரீர் சித்தங்கொள்வீரானல், நாங்கள் சதாகாலமும் எங்கள்முழுஇருதயத்தோடும் தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரஞ்சொல்லுவோம்.

மருதமடுச் செபமாலை மாதாவே! எங்கள்மத்தியில் பரிசுத்தரான தேவதொண்டர்கள் அதிகரிக்கச் செய்தருளும்,

ஆமென்.

உங்கள் அனைவருக்கும் தேவபாலனின் ஆசியை வேண்டிநிற்கும்,

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.,
யாழ்ப்பாண மேற்றிராணியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

### அணுமின்சாரக் கதிர்ஆபத்து

ஓர் அணுமின்சார நிலையத்திலிருந்து பெரியஅளவான ஓர்அணுமின்சார றேடியோக்கதிர் தற்செயலாக வெளிகொள்ள நேர்ந்தால் என்னநடக்கும்? அங்கிருந்து ஒன்றேகால்மைல்தூர சுற்றளவிலுள்ள எல்லோரையும் கொன்றழித்து விடுமென்று பிரித்தானிய அணுச்சக்தி ஆராய்ச்சி ஸ்தாபனத்தைச்சேர்ந்த பிரித்தானிய விஞ்ஞானிகள்இருவர் கண்டு பிடித்திருக்கின்றனர். ஒன்றேகால்மைல்தூரச் சுற்றளவுக்கப்பால் ஓரத்தில்இருப்பவர்களும் உயிர்பிழைப்பது பாதிக்குப்பாதி சந்தேகமேயென்றும், பத்தரை மைல் தூரச் சுற்றளவுக்கப்பால் இருப்பவர்களுக்கு எவ்விதபங்கமும் ஏற்படாதென்றும் இந்தவிஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

### இந்தியபிரதமரும் சமாதானமும்

இந்தியாவிலே கர்னூல் எனுமிடத்தில் சென்ற 9-ந்திகதி நடைபெற்ற பொதுக்கூட்டம்ஒன்றில் இந்தியபிரதமர் பண்டிதநேருஅவர்கள் பேசியது வருமாறு: “பைத்தியகாரர்மட்டுமே உலகில்யுத்தத்தை விரும்புவார்கள். உலகத்திலுள்ள மிகப்பெரும்பான்மையான மக்கள் சமாதானத்தையே ஆசிக்கின்றார்கள். ஒவ்வோர்நாட்டின் தலைவர்களும் சமாதானத்தை ஆசிக்கின்றார்கள். ஆனால், சமாதானத்தை ஆசிப்பது வேறுவிஷயம். சமாதான சூழ்நிலையை ஆக்குதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது வேறுவிஷயம். உலக இராசதந்திரிகள் சமாதானத்தைவிரும்பினால் அவர்கள் தங்கள் பேச்சுக்ளிலே கட்டுப்பாட்டை அனுசரிக்கவேண்டும்.”

● மரியாயின் மாசில்லாத இருதய மிஷனரியசபையைச் சேர்ந்த வண. பீலிக்ஸ் வேர்வில்கெண் சுவாமியார் ஜப்பானிலே கண்டாநகர் றெயில்வேஸ்றேஷனில் “இளங்கத்தோலிக்க தொழிலாளி” என்ற பத்திரிகையை விற்கத் தொடங்கியிருக்கிறார். அதே வேளையிலேயே கத்தோலிக்க சமயத்தைப்பற்றியும் பிரசாரஞ்செய்கின்றார். அன்றுகொண்டுசென்றபத்திரிகைகளை யெல்லாம் அவர் தொழிற்சாலைத் தொழிலாளிகளுக்கு நிமிஷத்துக்கு ஒன்றுவீதம் விற்றுவிடலாயினர்.

● ஸ்பானியதேச ரொலடோ நகரிலுள்ள தொமினிக்குவின்சபைக் கன்னியாஸ்திரிமாரின்மடத்திலே எல்கிறெகோஎன்னும் பிரபல சைத்திரிகரால் தீட்டப்பெற்ற கிறீஸ்துநாதரின் ஜனன சித்திரம்ஒன்று இருந்துவருகிறது. இதற்கு 20,000 பவுண் விலைபேசி அதனைவாங்கிப் பிறநாடுஒன்றுக்கு அனுப்பிவைக்க வர்த்தகமுதலாளிஒருவர் திட்டம்போட்டார். ஆனால், கன்னியாஸ்திரிமார் அதைக் கொடுக்க மறுத்துவிட்டனர். தற்போது அவர்கள் இந்தப்படத்தை ஸ்பானிய அரசாங்கத்துக்குப் 13,000 பவுணுக விற்றிருக்கின்றனர். இதுஅங்கே மதிரித் நகரிலுள்ள பிறடோ நூதனபொருட்காட்சிச்சாலையில் இருந்துவரும்.

### பத்துருத்தலாவது கனத்........

ருஷியபிரதமர் புல்கானினும், கம்யூனிஸ்தகட்சிப்பிரதமகாரியதரிசி குருஷெவும் சென்றகார்த்திகை 21-ந்திகதியன்று டில்லிநகரிலுள்ள ஒருசாரணமுகாமுக்கு விஜயஞ்செய்திருந்தார்கள். அங்கிருந்த கயிற்றுக்கட்டில்கள் எவ்வளவு உபயோகமானவையென்று விளக்கும்படியாகப் பண்டிதநேருஅவர்கள் அதில் படுத்துக்காட்டினர். உடனேகுருஷெவ் தானும்அவ்வாறு படுத்துச்சோதிக்க விரும்பினர். ஆனால், அவர்படுத்தபோது கனந்தாளமாட்டாது கட்டில் முரிந்துவிட்டது. ஆயினும்கனம்குருஷெவ் தரையைத்தொடுவதற்குமுன் “துள்ளிக்குதித்து எழுந்துநின்று அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்” என்று பத்திரிகைகளில் செய்திவெளியாயிருக்கிறது. ருஷிய தலைவர்களுக்கு இந்தியாவில் அளிக்கப்பட்டுள்ள ‘கனஜோர்’ விருந்துகளைக் கவனித்தால் கனம்குருஷெவ் ருஷியாவுக்குத் திரும்புகையில் தனதுகனத்தில் குறைந்தபட்சம் பத்துருத்தலாவது கூடியிருப்பரென எதிர்பார்க்கலாமாம்.

● பாரம்பரியம் கூறுகிறபடி, நசரேத்தூரிலே கபிரியேல்தேவதூதன் கன்னிசுத்த தேவதாயாருக்குக் காணப்பட்டஇடமாகிய திருக்கோவிலுக்குமேலாய் இருந்துவந்த எளிமையான கோவிலினிடமாக மங்களவார்த்தைப் புதியமகாலயம்ஒன்று தற்போது நவமாகக் கட்டியெழுப்பப்படுகின்றது.

● பரிசுத்த ஸ்தானத்தினிடமாகப் பாகிஸ்தான் அரசாங்கத்தின் முதலாவதுபிரதிநிதியாக நியமனஞ்செய்யப்பெற்ற டக்றர் ஈ.ஷாஹிட் சுகிறுவார்டி அவர்கள் அன்று ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான்மாளிகைசென்று பரிசுத்த பாப்பாசரிடம் தமது நியமனஅதிகாரபத்திரங்களைச் சமர்ப்பித்தாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. 65வயதுடையவரானஇவர் ஒக்ஸ்வோட் சர்வகலாசாலையிலும் கல்விபயின்றவர்.

● கோறியாவிலே இப்போது 2லட்சத்துப்15 ஆயிரம்கத்தோலிக்கர் இருக்கின்றார்கள். இவர்களில் பதினையாயிரம்பேரும் சென்றவருடத்திலே கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டார்களென்று செயூல்நகரின் றேமேற்றிராணியார் தெரிவிக்கின்றார். தற்போது ஏறக்குறைய 26,000 பேர் திருச்சபையில் சேர்ந்துகொள்ளுமாறு அங்கே ஞானோபதேசம் படித்துவருகின்றார்கள்.

● இந்தோசினாவிலே சுதந்திரவியெற்னுமைச் சேர்ந்த சைகோன்நகரிலே சென்வின்சென்ற் டிபோலின் தருமசபைக் குமாரத்திகள்சபையைச் சேர்ந்த சங். மத்தில்டாஎனும் 32வயதுடைய ஓர்கன்னியாஸ்திரி அங்கு மாதந்தோறும் சராசரிவீதமாக1,500 பேருக்கு ஞானஸ்நானம் அருளிவருகின்றாள். இவள் ஓர்நேர்சாயிருந்துவறியவர்களையெல்லாம் அவர்கள் வீடுகள்,குச்சுவீடுகளிற்போய்ச் சந்தித்துச் தருமதொண்டுகள் ஆற்றிவருகின்றாள்.

## திரு. வ. சந்தியாப்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணத்திலே பலராலும் நன்கறியப்பெற்றவரும், நமது அச்சகத்தில் 25ஆண்டுகளாகப் போர்மனுக விளங்கியிருந்து சிலவருடங்களின்முன் இளைப்பாறியவருமான திரு. வ. சந்தியாப்பிள்ளை அவர்கள் சிலதினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 10-ந்திகதி சனிக்கிழமை மாலை காலஞ்சென்ற துயரசெய்தியானது அவரது இனசனர், நண்பர்களுக்கெல்லாம் பெருங்கவலையைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 75. இவர் நமது அச்சகத்தில் பணியாற்றிவந்த காலத்திலே தமதுகடமையைப் பிராமாணிக்கமாகப்பார்த்தும், சமாதானமாகப்புழங்கியும் எல்லோரதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். தினமும் திவ்வியபூசைகண்டும், திருவிருந்துப் பந்தியமர்ந்தும் அடக்கமாக வாழ்க்கை நடத்திவந்தார். இவருக்கு மூன்று புதல்விகளும், அநேக பேரப்பிள்ளைகளும் உள்ளனர். மறுநாள்சாயந்தரம் இவரின் பிரேதசேமமானது பெருந்திரளான இனசனர், சிநேகிதர் கூடிய சமுகத்திலே ஆசனக்கோவில் கட்டளைக்குரவரையும், உதவிக்கட்டளைக்குரவரையும் துணையாகக்கொண்டு நமதுஅச்சக மனேஜர்சுவாமியவர்கள் வீட்டிலும், கோவிலிலும், சேமக்காலையிலும் துக்கசங்கீதங்கள்பாடிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாகநடந்தேறியது. இவரை இழந்துதன்புறும் புத்திரிகள், மருகர்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

**R. I. P.**

## ஆசிரியசேவையின் வெள்ளிவிழா

கடந்த கால்நூற்றாண்டளவாகக் கத்தோலிக்கபாடசாலைகளில் ஆற்றிய சேவையைப் பாராட்டுமுகமாகத் திருமதி அக்னெஸ் அகஸ்ரின் அவர்களுக்குச் சென்ற 7-12-55 புதன்கிழமை சென் சாள்ஸ்கலாசாலையில் ஓர்கொண்டாட்டம் நடத்தப்பட்டது. மதிய விருந்தின்போது அன்னாரின் சேவைநலம்பாராட்டித் தலைமைஆசிரியரும், பலஉடனாசிரியர்களும் சொற்பொழிவாற்றினார்கள். அவர் ஆசிரியத்தொண்டாற்றிய பாடசாலைகளிலெல்லாம் தமதுகடமையைக் கண்ணியமாகச் செய்துள்ளாரென்றும், அவர் மாணவர்களின் அன்புமிக்க அன்னைபோலும், உடனாசிரியர்களின் உத்தமசகோதரிபோன்றும் விளங்கிவந்தாரென்றும், தன்னடக்கமே அவரது சிறந்தபண்பாகுமென்றும், அவர் ஆசிரியர்களுக்கு ஓர்அணிகலமானவரென்றும் அவருக்குப் புகழ்மாலை சூட்டிநின்றார்கள். அன்பளிப்பும்வழங்கிக் கௌரவப்படுத்தினார்கள். பிரதிமைப்படமும் பிடிக்கப்பட்டது. இவர் இளவாலை, சில்லாலை, புங்குடுதீவு, மிருசுவில், யாழ்ப்பாணத் தமிழ்க்கன்னியர்மடம் ஆதியபாடசாலைகளில் தொண்டாற்றியபின் இப்பொழுது சென் சாள்ஸ்கலாசாலையில் கடமையாற்றி வருகின்றார். இவர் நல்லூர், அர்ச். ஆசீர்வாதப்பர் பாடசாலைத் தலைமைஆசிரியராகிய திரு. ஏ. எஸ். அகஸ்ரீன் அவர்களது பாரியாராவர்.

— நிருபர்

## மார்கழி மாதம்

**பொதுக் கருத்து:** உலகத்தைப் புனிதப்படுத்தும் கிறீஸ்துவ இயக்கத்துக்காக வேண்டிக் கொள்வது.

**மிஷன் கருத்து:** ஜப்பானிய சர்வகலாசாலை மாணவர்கள் நேர்மையான கொள்கைகள் ஊட்டப்பெறுவதற்காக மன்றாடிக் கொள்வது.

## பிரியாவிடை வைபவம்

மிருசுவில், கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியராயிருந்து ஈராண்டுகளாக அருந்தொண்டாற்றிவந்த திரு. எஸ். சின்னப்புநாயகம் அவர்களின் இடமாற்றங்காரணமாக அன்னாரின் அரியசேவையைப் பாராட்டுமுகமாய்ச் சென்ற 7-12-55 புதன்கிழமை பாடசாலைமண்டபத்தில் கட்டளைக்குரவர் வண. ஜே. ஸ்பம்பதிசுவாமியவர்கள் தலைமையில் ஒருபிரிவுஉபசாரவிழா பரிமளிப்பாக நடைபெறலாயிற்று. அவ்வமயம் ஆசிரியர்களும், பிள்ளைகளும தங்கள்அன்பையும், நன்றியையும் அவருக்குத் தெரிவிக்குமுகமாகக் கவலைதோய்ந்த வதனத்தோடும், கலங்கியகண்களோடும் திரளாகக் குழுமியிருந்தார்கள். சிரேஷ்டமாணவன் செல்வன் செ. சூசைப்பிள்ளை பிரியாவிடைநாயகருக்கு மலர்மாலைசூட்டிநிற்க, சிறுமிகளாற் பிரியாவிடைக்கீதங்கள் படிக்கப்பட்டன. பின்னர் செல்வன் க. வயிரமுத்து பிரியாவிடை வாழ்த்துப் பாவிதழைக் கல்லுங்கனியுமாறு கனிவாய்ப்பாடினர். அதன்மேல் பள்ளிச்சிறுமிகள் அரிய நடித்தல்கள் பல நடித்துக்காட்டினர். செல்வன் பி. செல்லையா ஆசிரியரின்மதிநலம், குணநலம், செயல்நலமுதலாம் பண்ணயங்கள்குறித்துச் சுருக்கமாகவும், உருக்கமாகவும் பேசிநின்றார். பிள்ளைகள் இவ்வாறு தங்கள்குறைசொல்லிப் பிரலாபிக்கும்வேளை உதவி ஆசிரியர் செ. செல்வரத்தினம்அவர்கள் “எங்கள்நல்லப்பர் சின்னப்பர்” என்ற பீடிகையுடன் ஆசிரியரின் பண்பாட்டுத்திறன்கள் பலவற்றையும் தெளிய எடுத்துக்காட்டினர். காட்டலும் தங்கள்உளங்கவர்ந்த தலைமைஆசிரியருக்கு மறக்கொணுத நினைவுச்சின்னமாக விளங்கும்பொருட்டு அழகிய மூக்குக்கண்ணாடி ஒன்றை அன்பளிப்பாக ஆசிரியரும், மாணவரும அளித்துநின்றனர். பிரியாவிடைநாயகரும் உள்ளம்நடுங்க, உரைதடுமாறப் பிள்ளைகளினதும், ஆசிரியரதும் அன்பில் தாம்திளைத்த ஈராண்டும் தமக்கு இரண்டுநாட்போற்கழிந்ததென்றும், அப்பெருமை கட்டளைக்குரவர்க்கும், பெற்றோர்க்குமே உரியதென்றும் கருத்துப்படப் பேசினர். ஈற்றில் பாடசாலைக் கீதத்துடன் வைபவம்முடிபுற்றது.

— நிருபர்

> கல்வியின்தன்மை இல்லாதவனை மிருகம்என்று சொல்லிவிட முடியாது. ஆனால், மனிதத்தன்மை இல்லாதவனை மிருகம்என்று அழைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர்

—: தமிழாக்கம் : S. S. :—

'சவுலாக' இருந்து 'பவுலாக' மனந்திரும்பிய அர்ச். சின்னப்பரைப்பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். அவர் யூதகுலத்தைச் சேர்ந்தவர். பரிசேயர். அவருடையதந்தை மதப்பற்றும், தேசப்பற்றும் நிறைந்தவர். தன்னுடையமகன் மதஅறிவிலும், குலப்பற்றிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று அவர் கண்ணுங்கருத்துமா யிருந்தார். பாடசாலைக்கு அனுப்புமுன் பிள்ளைகளுக்கு வீட்டிலேயே கல்விகற்பிக்கும் நல்லமுறை யூதர்கள்மத்தியில் இருந்துவந்தது. யூதர்கள் தங்கள்பிள்ளைகளின் படிப்புவிஷயத்தில் அவ்வளவுகவனம் செலுத்தினார்கள். பிள்ளைக்கு ஐந்துவயது நடக்கும்போதே அவனுக்கு உபாகமத்தின் (Deuteronmi) 5-வது, 6-வது அத்தியாயங்களிலுள்ள யூதசட்டங்களையும், பெரியதிருவிழாக்களில் பாடப்படும் 113 லிருந்து 118 வரையுள்ள அல்லேலூயாச் சங்கீதங்களையும், முக்கியமான யூததிருநாட்களின் அர்த்தத்தையும் கற்றுக்கொடுப்பார்கள்.

சவுலுக்கு ஐந்துவயது நடக்கும்போது, அவருடையதந்தை அவனை யூதமதப்பாடசாலைக்கு அனுப்பிவைத்தார். தினமும் காலையில் ஓர்வேலைக்காரன் எழுதும்கருவிகளையும், புத்தகப்பையையும் தூக்கிக்கொண்டு, நடமாட்டம்அதிகமான பாதைகள்வழியே சவுலைப் பாடசாலைக்கு அழைத்துச்செல்வான். அங்கேஅவன் மற்றப்பிள்ளைகளோடு தரையில் உட்கார்ந்து மெழுகுப்பலகைகள்மீது எழுத்தாணிகளைக்கொண்டு எழுதிப் படிக்கத் தெரிந்துகொண்டு வேதாகமங்களைக் கற்றுவந்தான். இப்படி அநேகவருடங்கள் பாடசாலையில் வேதாகமங்களைக் கற்பதில் செலவழித்தான். அப்படிப் படித்துவருங்காலத்தில் தன்குலத்தாரான இசிறவேலர் மற்றெல்லாத் தேசத்தாரையும்விட எவ்வளவோ முக்கியமானவர்கள் என்பதை அறிந்தான்.

ஒவ்வொருநாளும் பாடசாலையிலிருந்து வீட்டிற்குச் செல்லும்போது இசிறவேலரின் சரிதையிலிருந்து புதிது புதிதான உணர்ச்சிமிகுந்த சம்பவங்களைக் கொண்டுசெல்வான். அவனோடு கூடப்படித்தவர்கள் அவன் யூதகுலத்தைச் சேர்ந்தவனென்று அவனைப்பற்றியும், யூதகுலத்தைப்பற்றியும் தாழ்வாகநினைத்திருக்கலாம். ஆனால், அவனுக்குத்தெரியும் தனது சனங்களின் பூர்வீகசரித்திரம் பெருமைவாய்ந்ததென்று. மற்றவர்கள் மகாஅலெக்சாந்தர், சீசர்முதலானோரின் வெற்றிகளைப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது, சவுலின் எண்ணங்கள் அவனுடைய பிதாப்பிதாக்களான ஆபிரகாம், யாக்கோப்பு முதலானோர் ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு அலைந்துதிரிந்த நாடோடிவாழ்க்கையில் ஊசலாடிக்கொண்டிருந்தன. சூசையோடு எகிப்தின் பிரமிட்கோபுரங்களைப் (Pyramid) பார்ப்பதுபோலவும், தாவீது, சஞ்சோன் ஆகியவர்கள் கோலியாத்தையும், பிலிஸ்தியர்களையும் சங்காரம்செய்யும் கோரக்காட்சிகளைக் காண்பதுபோலவும் கனவுகண்டுகொண்டிருந்தான். மற்றப்பிள்ளைகள் தங்கள்தேவதைகளான ஜூப்பிற்றர், டிடோ (Dido) இவர்களின் செயல்களைக் கண்டனம் செய்துகொண்டிருக்கையில், தன்சனங்கள் யாவேயின் பரிசுத்த நாமத்தின்மீது எவ்வளவுபயபக்தி கொண்டிருந்தார்கள்என யோசித்துப் பிரமிப்படைவான்.

தனது சனங்கள் அடைந்த மற்றநேகவெற்றிகளையும் மனக்கண்முன் ரூபிகரித்துப் பெருமிதம்கொள்வான். அவர்களது துன்பதுரிதங்களையும், தாழ்மைகளையும் கண்டபோதோ மனம் வருந்துவான். இசிறவேலரின் சங்கீதங்களும், புலம்பல்களும் அவனுடைய செவிகளில் எந்நேரமும் எதிரொலித்துக்கொண்டிருந்தன. யூதர்களின் எதிர்கால செல்வாக்கைப்பற்றி (அவர்கள் கனவுகண்டுகொண்டிருந்தவண்ணம்) உபாத்தியாயர் அவனுக்குச் சொல்வதுண்டு. தீர்க்கதரிசிகள் வாக்களித்த யூதகுலஇராசா — மெசியா வருவார்; அப்போலோவின் வாளைவிட அதிகசக்தியும், பளபளப்பும்வாய்ந்த அதிசயமான வாளோடுவருவார்; உலகம்முழுவதையுமே வெல்லுவார்; அம்மகாவெற்றிக்குப்பிறகு உலகம் முழுதும் கடவுளைத்தொழ ஜெருசலேமுக்குவரும். றோமாபுரியின் சக்கிரவர்த்திகூட ஜெருசலேமுக்குவந்து முழங்காலிலிருந்து வணங்குவார் என்பதையெல்லாம்கேட்டு அந்தக்காலம் எப்போது வருமோவென்று ஏங்குவான்.

Taken from: "Paul of Tarsus" by Rt. Rev. Joseph Holzner.

— முன்னோடி

## சொல் கிளியே!

— "ஜெயம்" —

வானிற் கதி ரெழுதி
வண்ணநிலா விளக்கேற்றித்
தானே கடு மிருளில்
தவங்கிடந்தான் யார் கிளியே?

தங்கம் பொன் குலுங்குந்
தாரணியைத் தான்படைத்தும்
பொங்குந் துயர்க் குடிலைப்
புகலடைந்தான் யார் கிளியே?

காற்றுக் கடல் மலைக்குக்
கட்டளைகள் தாங்கொடுத்தும்
வாட்டும் பனிக் குளிரில்
வந்துதித்தான் யார் கிளியே?

மன்னர் மன்ன னவன்
மன்னுயிரின் தேவனவன்
இன்னற் புவியிடையே
ஏன் பிறந்தான் சொல்கிளியே?

அன்பின் சுடர்க் கொளுந்து,
அன்னைமரி யீன்றளித்த
சின்னஞ் சிறு மகனின்
சீர்ப்பெருமை சொல்கிளியே?

## அதிசிரேஷ்டதாயாருக்குக் குதூகல வரவேற்பு

திருக்குடும்பசபையின் அதிசிரேஷ்டதாயார் சென்ற 29-11-55 செவ்வாயன்று காலை 11 மணிக்குக் குருநகர், சென்ஜேம்ஸ் பெண்பாடசாலையைத் தரிசிக்கலானார். யாழ்ப்பாணத் திருக்குடும்ப கன்னிகாமடத்திற்கு மோட்டர்ரதங்கள்சென்று அவரையும், மற்றும் உதவிக்கன்னியாஸ்திரிமாரையும் ஏற்றிக்கொண்டு ஆடம்பரபவனியாக முதலியார்வீதியை அடைந்ததும், நாலாவிடங்களிலுமிருந்து வந்துகுழுமிய சனத்திரளின்மத்தியில் தாயார் அவர்கள் இறங்கினார். நாதசுரவாத்தியங்கள் முழங்கின. சிறுமிகளால் பூமாலையும், பாமாலையும் சூட்டப்பட்டன. பின்னர் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியின் இருமருங்கும் பாடசாலை மாணவிகள் கொடியேந்தி ஆர்ப்பரித்து நிற்கப் பாடசாலையைநோக்கிப் பவனி சென்றார். வழியிலே பலகனவான்கள் குழந்தைகள்மூலம் பலஅன்பளிப்புகள் அவருக்கு வழங்கினர். பாடசாலைவாயிலிலே 2-ம் வட்டாரப் பிரதிநிதி திரு. என். எஸ். எவ். சேவியர்அவர்களால் அழகியபெரிய மலர்மாலை அணிவிக்கப்பட்டது. சென்ஜேம்ஸ் விசாரணைப் பங்குக்குரவர் சமேதராய்த் தாயாரும், உதவிக்கன்னியாஸ்திரிமாரும் உயர் மேடையில் அமர்ந்ததன்மேல் கன்னியாஸ்திரிமாரும், ஆசிரியைகளும் தங்கள் அன்பின் துதியை அன்னையருக்குச் சமர்ப்பித்தனர். மாணவிகளால் ஞானப்பூச்செண்டும், வாழ்த்துப்பத்திரமும், பலஅன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. பின்னர் மனதிற்கு இதமூட்டும் அரியபாடல்கள், ஆடல்கள், நாடகங்கள் நடைபெற்றன. பிரதிநிதிஅவர்கள் தாயாரின் வரவைப்பாராட்டிச் சில பேசியபின் தாயாரவர்கள் எழுந்து தமக்குஅளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களுக்காக நன்றித்துதிகூறினர். ஆலயவளவிலே நிறுத்தப்பட்ட உடையலங்கார மாணவிகளின் வரிசையூடே தாயாரின் மோட்டர்ரதம் பிரியாவிடைபெற்று நகர்ந்துசென்று. தனது இடம் சென்றது.

—நிருபர்.

## பிரியாவிடை விழா

உயிலங்குளம், கததோலிக்க கனிஷ்டபாடசாலையில் கடந்த மூன்றரைஆண்டுகளாகச் சிறப்பாக ஆசிரியத்தொண்டாற்றிவந்த ஆங்கிலஉதவி ஆசிரியை செல்வி டி. மேரிதெரேசா கொழும்புத்துறை ஆசிரியகல்லூரிக்குப் பயிற்சிபெறச்செல்வதை முன்னிட்டு அப்பாடசாலை மரியாயின்சேனையார் சென்ற 7-ந்திகதி பிற்பகல் வண. கட்டளைக்குரவர் தலைமையில் ஓர்பிரியாவிடைவிழா நடத்தினா. அப்போது தலைவர்சுவாமிகளாலும், மாணவன் அ. சந்தியோகு, தலைமையாசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை என்பவர்களாலும் ஆசிரியையின் அடக்கவொடுக்கம், கலைபயிற்றுந்திறன், மாணவர்களில் அன்பு ஆகியாம் அரும்பண்புகளைப் பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. இவர் மரியாயின் சேனைப் பாலர்பிறசீடியத்திற்குத் தலைமையாயிருந்து விமரிசையாகத் தொண்டாற்றிவந்தமை ஈண்டு குறிப்பிடற்பாலது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணமற்போன முத்து

ஓர்நாள் பெண்பாவையொருத்தி ஜோர்தான்நதிக் கரையையடுத்த வனாந்தரத்தில் இறந்துகிடப்பதையும், அவள் தலைமாட்டில் "பாவியாகிய என்னை இவ்விடத்தில் அடக்கஞ்செய்யும்" என்று எழுதியிருப்பதையும் கண்டார்ஓர்குருவானவர். அப்போதே ஓர்சிங்கம் ஆங்குவந்து குழிதோண்டவே, அதில்அம்மாதை அடக்கஞ்செய்து திரும்பினார் அக்குருவானவர்.

இந்தஅநாதை எகிப்து தேசத்தில் பிறந்துவளர்ந்து சௌந்தரியமிக்க இளவயதை அடைந்தபின் தனது ஆசாபாசம் அலைத்தவழியெல்லாஞ் சென்றாள். உலக இன்பசுகங்களை இஷ்டம்போலச் சுகிக்குமாறு தாய்தந்தையரின் சொற்கேளாது, வீட்டைத் துறந்து அலெக்சாந்திரியா பட்டணத்தை அடைந்தாள். அங்கே தன்னிஷ்டப்படியே அலைந்துலைந்து தெய்வபயமற்று, இஷ்டப்பிரசாதமெனும் அரிய பொக்கிஷத்தை இழந்து, சீர்கெட்டமாதாய்த்திரிந்தாள். இவ்வாறுபதினேழு வருடம் அவள்தனது இஷ்டம்போல் நடந்தபிறகு ஜெருசலேம்நகர் சென்றாள். அங்கும் தன்மனம்போலச் சிற்றின்பசகதியில்அமிழ்ந்திப் பெரும்பாவியாய் நடந்தாள்.

அங்ஙனமாக, ஓர்நாள் அறையுண்ட திருச்சிலுவையைச் சந்திப்பதற்காக அநேக யாத்திரிகர்கள் தங்குதடையின்றி ஓர்கோவிலுக்குள் போகிறதைக் கண்டு தானும் வேடிக்கையார்த்தமாக அதைப்பார்க்கப் போனாள். போய்த் தேவாலயத்துள் பிரவேசிக்கையில், தானறியாதகரத்தால் தடுக்கப்படுவதை உணர்ந்து, பலமுறை பிரயாசப்பட்டும் இயலாமற்போகவே, வெளிமண்டபத்தின்மூலையொன்றில் உட்கார்ந்து யோசித்தபோது தனது நிர்ப்பாக்கிய ஸ்திதியைக் கண்டுபிடித்தாள். பெருமூச்செறிந்து, மேல் நோக்கியபோது, கண்டாள் மாதாவின் படத்தை. விழுந்தாள் தாயின் பாதத்தில். "அம்மா, என்பரிதாப நிலைமையை அறிகிறேன்; உமக்கும், உமது திருக்குமாரனுக்கும் ஏற்காத துரோகங்கள் எண்ணிறந்தன செய்தேன். அடியாளுக்காக நின்நேசமகனை வேண்டாயோ? அண்டிவந்தோரைக் கைவிடாது ஆதரிக்கும் அமிர்தகுணசீலியென்று உம்மைஅகிலமெல்லாம் போற்றுகின்றதே! என்னை ஆதரிக்கமாட்டாயா? என்சீவியத்தை மாற்றித் தேவரீர் சொல்லுமிடஞ்சென்று தபம்புரியத் தயாராயிருக்கிறேன்" என்று பரிசுத்த தேவதாயாரை நோக்கிச் செபிக்கவே, "நீ உன் நடத்தையை மாற்றத் தீர்மானித்திருப்பதால் உள்ளே போகலாம்" என்று தனதுஉள்ளத்தில் ஒலிப்பதை உணர்ந்தாள். எழுந்தாள் உடனே. போயினாள் உள்ளே. ஆ! என்ன ஆச்சரியம்! முன்னிருந்ததடை இப்போது காணப்படவில்லை. தாராளமாய்ச் சென்று தரிசிக்கிறாள் பரிசுத்த சிலுவையை. அடைகிறாள் மனச்சாந்தியை. வெளியேசென்று படத்தின்முன் அமர்ந்து அமலதாயின் ஆலோசனையைக் கேட்கிறாள். "நீ எழுந்து ஜோர்தான் நதியைத்தாண்டி அக்கரைசெல்; அங்கே நீ இளைப்பாற்றியைக்காண்பாய்" எனச் சப்திக்கும் பாமதாயின் இன்மொழி கேட்டு ஆனந்த பரவசமுற்றவளாய் எழுந்தாள்.

அதன்மேல் தனது முக்கியஅலுவலாகிய பாவசங்கீர்த்தனத்தை முடித்துக்கொண்டு, சற்பிரசாதநாதரையும் தனதுஇதயத்தில் எழுந்தருளச்செய்து ஏகினாள் ஜோர்தானைத்தாண்டி. ஆங்கு ஓர்வனாந்தரத்தைக் கண்ணுற்று அங்கே சஞ்சரித்திருந்து, செபதபத்திலும், ஒருசந்திஉபவாசத்திலும் போக்கினாள் தன்காலமெல்லாம்.

யாரைப் பலவந்தமாகப் பற்றியிழுத்து விழுங்கலாமென்று அலைகின்ற நரகசர்ப்பம் சும்மா அமரிக்கையாய் இருக்கவிடுமா? "அசுத்தஅரூபி ஒருமனிதனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் இளைப்பாற்றியைத்தேடித் திரிந்தும், கிடையாமல்: நான் விட்டுப் புறப்பட்ட என்வீட்டுக்குத் திரும்பிப் போவேனென்றுசொல்லி, மறுபடிவந்து, அது துடைப்பத்தால் சுத்தமாக்கப்பட்டு, சோடிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறது. அப்பொழுது அதுபோய், தன்னிலும் அதிகபொல்லாத வேறே ஏழுஅரூபிகளைத் தன்னோடு கூட்டிக் கொண்டுவந்து,உள்ளேபுகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய முந்தின ஸ்திதியிலும் பிந்தின ஸ்திதி அதிக கெடுதியாயிருக்கிற" தென்ற நமதுஆண்டவரின் வாக்குக்கிணங்க, பசாசு முதல்பதினான்கு வருடம் அவளை வஞ்சித்துக்கெடுக்கச் செய்யாதசூழ்ச்சியெல்லாம் செய்தது. தேவதாயாரின் உதவியால் வென்றாள் அந்நரகக் கூளியை.

நாற்பது ஆண்டுகளுக்குப்பின் தெய்வாதீனமாய் ஓர்குருவானவரை அவள் கண்டாள். இவர்தான் அர்ச். சொஜிம். இந்தப்பரிசுத்தகுருவானவரிடம்தனது சீவியவாலாறுகளை அவள் வெளிப்படுத்தித் திவ்யநற்கருணை கொண்டுவரும்படிகேட்கவே அவரும்அவ்விதமேசெய்தார். என்ன ஆச்சரியம்! சர்வேசுரன் தமதுதாசர்களுக்குச் செய்யாத உதவியும்உண்டா? குருவானவரைக்கண்டதும் அந்தத்தபமாது தண்ணீர்மேல் நடந்து அக்கரைசேர்ந்து திவ்வியசற்பிரசாதநாதரைப்பெற்று, அவர் மறுவருடமும்அங்குவந்து தன்னைப்பார்க்க வேண்டுமென்றுமன்றாடித் தன்னிடத்துக்குத் திரும்பினாள்.

இந்தத்தபசியின் விருப்புக்கிசைந்து இந்தஅர்ச்சியசிட்ட குருவானவரும் மறுவருடம் அவ்விடம்சென்று பார்த்தபோது, அவள் மரித்துக்கிடப்பதையும், உடலாதியக்தம் மோட்சபிரகாசம் வீசுவதையுங் கவனித்தார். தலைமாட்டில் அவள் இறந்த திகதியும், "பாவியாகிய இந்த எகிப்துமரியம்மாளை இவ்விடத்தில் அடக்கஞ்செய்யும்" என்றவசனமும் எழுதியிருந்தது. சிறிதுவேளையால் ஓர்சிங்கம் அங்குவந்து குழிதோண்டவே, அதில் அவள் சடலத்தை அடக்கிச்சென்றார் குருவானவர்.

சகோதரர், சகோதரிகளே! யுவர்கள், யுவதிகளே! எச்சரிக்கை! பெற்றோரின் கட்டளைகளும், புத்திமதிகளும் உங்களுக்குக் கசப்பாயிருக்கலாம். ஆனால், அவைகளை மீறிநடக்க வேண்டாம். மீறிநடந்து அலைந்ததினாலன்றோ விலையேறப்பெற்ற மோட்சமுத்தாகிய இஷ்டப்பிரசாதத்தை இழந்தாள் எகிப்து மரியம்மாள். அதனால் நீங்கள் புத்தியாய்நடந்து உங்கள் கற்பைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். இதற்காக அமலோற்பவ நாயகியை அநுதினமும் மன்றாடிவாருங்கள்.

## வரவேற்பு விழா

பாசையூர்

திருக்குடும்ப கன்னியர்களின் அதிசிரேஷ்ட தாயார்அவர்கள் சென்ற 4-12-55 ஞாயிறுவாரம் சென்அன்ரனிஸ் பாடசாலைக்குச் சமுகந்தாலாயினார். பாடசாலைவீதியானது, துவசதோரணங்களால் சிங்காரிக்கப்பெற்றுச் சிறந்தகாட்சி யளித்துநின்றது. அனறு சாயரட்சை பாசையூர்ப் பஸ்ஸ்தானத்தில் கட்டளைக்குரவர் வண. ஏ. லெபோணசுவாமியவர்கள் முன்னணி தாங்கிநிற்க, சங். கன்னியர்கள், ஆசிரியகலாசாலை மாணவிகள், ஆசிரியைகள், கொடிகள்காத்தேந்திய பாடசாலை மாணவர் மாணவிகளாய் ஐந்நூற்றுக்கதிகமானோர் அணிவகுத்து நின்றார்கள். 2-30 மணிக்குத் தாயார்அவர்கள் வந்துசேர்ந்ததும், கட்டளைக்குரவர் பிரான்சியமொழியில் நல்வரவுகூறியதும், அழகுறஅலங்கரித்த மோட்டர் காரிலே கன்னிகாமடத்திற்கு அழைத்துச்செல்லப்படவே, மடத்துவாயிலிலே பாசையூர்ப்பாடசாலை ஆசிரியைகள் மாலைகள்சூட்டினார்கள். விசித்திர வேலைப்பாடமைந்த விநோதவெள்ளிச் செயற்கைப் பூச்செண்டொன்று வழங்கப்பட்டது. பின்னர் கும்மி, கோலாட்டம், பூத்தெளித்தல் ஆதியவற்றுடன் பட்டுக்குடை நிழற்ற, தாயார்அவர்கள் நிலபாவாடைமீது பாசையூர்ப்பாடசாலையை அணமியதும், அதன்வாயிலிலே திரு. செபஸ்ரியாம்பிள்ளை சேயோன், J. P. அவர்கள்உட்பட அவ்வூர்மக்கள் புடைசூழ்ந்துநின்றார்கள். சிறுவர்கள் பலரால் மலர்மாலைகள், பூச்செண்டுகள் அளிக்கப்பட்டன. தாயார் அவர்கள் பாடசாலை உயர்மேடையில் அமர்ந்ததும், இயற்கைவெண்புறாஒன்று ஞானப்பூச்செண்டு அளித்தது. ஆசிரியைகள் அன்பளிப்புவழங்கினர். சிறுவரின் பாடல்கள், நடினங்கள், ஆங்கில, தமிழ்ச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கட்டளைக்குரவர்எழுந்து, தாயார் அவர்களின் இலங்கைத்தரிசனையை—கன்னியர்கள் தலைவரென்னும் மகிமையை ஆங்கிலம், தமிழெனும் இரு பாஷைகளிலும் இன்பந்ததும்ப எடுத்துக்காட்டினார். தேசியகீதம் பாடிமுடிந்ததும், குருப்பிரசாதிகள் மூவர், சிரேஷ்டதாயார், கன்னியர்கள், ஆசிரியைகள் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டு, வரவேற்புவைபவம் இனிதே நிறைவாயிற்று.

— நிருபர்

## சேவைநலம் பாராட்டுவிழா

நாற்பதுவருடகாலம் ஆசிரியசேவை சிறப்பாகஆற்றியவரும், சித்தவைத்தியருமாகிய திரு.யோ. சவரிமுத்து, பி.ஐ. எம். அவர்களின் சேவைநலம் பாராட்டுமுகமாகத் தீவுப்பகுதிமக்களால் சென்ற 4-12-55 ஞாயிறுவாரம் ஊர்காவற்றுறைமக்களால் ஓர்பாராட்டு விழா அர்ச். அந்தோனியார் தமிழ்ப்பாடசாலைமண்டபத்தில் நடைபெற்றது. ஆசிரியர்அவர்கள் நெடுந்தீவு இராமநாதமுதலியார் வம்சத்தில் உதித்தவர். இவர்தந்தையார் யோசவ்இராமனுதர் ஓர் ஆசிரியராகவும், வைத்தியராகவும் விளங்கினர். ஆசிரியசேவையில் தமது கடமையைக் கிரமமாகவும், திறமையாகவும் நிறைவேற்றினர். அன்றியும் இவர் தமது ஆசிரியசேவையின் பிற்பகுதியை ஊர்காவற்றுறை, நாரந்தனை ஆதியாம் இடங்களில் நடத்தியுள்ளார். ஊர்காவற்றுறையில் 1949-ம்ஆண்டு இவர் ஓர்முரிவுநெரிவு வைத்தியநிலையத்தைத் திறந்தார். தீவுப்பகுதிமக்களுக்கு இவர் வைத்தியத்துறையில் அரும்பணிசெய்துள்ளார். மேலும் தீவுமக்கள் பணச்செலவு அதிகமின்றியும். நேரச்சுருக்கத்துடன் தங்கள் அலுவல்களை இலகுவாகப்பார்க்க உதவிசெய்தார். இவரதுசேவைநலம் பாராட்டி ஓர்உபசாரப்பத்திரம் படித்துவழங்கப்பட்டது. ஆசிரியகௌரவத்துக்காகப் பொன்னாடை போர்த்தினர். வைத்தியதிறமையை உறுதிப்படுத்தத் தங்கப்பதக்கம் அணிவித்தனர். பொற்கிழிவழங்கிப் பெருமைப்படுத்தினர். அன்னாரின் சேவைநலம்பாராட்டி ஆசிரியர் ச. யோ. ஆசிநாதன், ஆசிரியர் சி. வைத்திலிங்கம், திரு. சு. நாகேந்திரர், நெடுந்தீவு கி. ச. தலைவர் ஆதியோர் பேசினர். தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமைவகித்தார்.

—நிருபர்

## காவலூர் குதூகலவரவேற்பு

திருக்குடும்ப கன்னிகாசபையின் அதிசிரேஷ்டதாயாரான அதிசங். யேசுவின் கிளேயர்தாயார் அவர்களுக்குத் தீவுப்பகுதிமக்களால் அர்ச். அந்தோனியார் கல்லூரிமண்டபத்தில் குதூகலமான ஓர்வரவேற்பு உபசாரம் அளிக்கப்படலாயிற்று. தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானம் அவர்கள் வரவேற்புவைபவத்திற்குத் தலைமைவகித்தார். கரம்பன், நாரந்தனை, ஊர்காவற்றுறைக் கத்தோலிக்க பெண்பாடசாலைகளைச்சேர்ந்த பிள்ளைகள் பெருந்திரளாகவந்து, வரிசையாகக் காத்துநிற்க, பெற்றோர், ஆசிரியர், பெரியோர்ஆதியோர் தாயாரின் வரவை எதிர்நோக்கிநின்றனர். சங். கன்னியர்ஸ்திரிமார் புடைசூழ நல்லதாயார் விழாமண்டபத்தை அடைந்ததும் மாலையிட்டு வரவேற்கப்பெற்றார். கொட்டும்மழையையும் பறுவாய்பண்ணாதுசனங்கள்வந்து குவிந்தவண்ணமிருந்தார்கள். பாடசாலைமாணவிகள் வரவேற்புக்கீதங்கள் பாடினர். காரியாதிகாரிஅவர்கள்எழுந்து, தீவுப்பகுதியிலே சங். கன்னியாஸ்திரிமார் பெண்கள் கல்விக்குப் பேருதவிசெய்து, மக்களின் அறிவுவிருத்திக்காக உழைத்துவருவது கண்டு தீவுப்பகுதிமக்கள் அவர்களின் சேவையை வியந்துபாராட்டுகின்றனரெனக் குறிப்பிட்டார். தாயாரைக் கௌரவிக்கும் நோக்கமாகவே இவ்விழா நடைபெறுகிறதென்றும், தாயாரின்வரவு எல்லோருக்கும் மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும் அவர்கூறினார். அதிசங். நல்லதாயார் எழுந்து இப்பகுதிமக்கள் கன்னியாஸ்திரிமாருக்குக் காண்பித்துவரும் நல்மனதையும், அவர்களதுசேவைக்கு உதவிசெய்து, அவர்களோடு ஒத்துழைப்பதையும் கண்டுஅகமகிழ்வதாகவும், இவ்விழா அந்தஒத்துழைப்பையும், அவர்களின் நன்றிஉணர்ச்சியையும் காட்டுவதாகவும், இலங்கையின் இப்பகுதியைத்தாம்தரிசித்துச் சந்தோஷப்படுவதாகவும் கூறிநின்றார். பின்னர் பாடசாலைகளின் நடிப்புகள், நடனங்கள் நடைபெற்றன. பின்பு அவர் ஊர்காவற்றுறையிலுள்ள மடங்களைத் தரிசித்துவிட்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பினார்.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTICE.

Local Option Poll to be held in 1955—56 for the Opening of an Arrack Tavern in Soranpattu in the Area of the Divisional Revenue Officer P. K. Pallai in the Jaffna District.

It is hereby notified that in terms of Rule 6 of Excise Notification 146 published in Government Gazette No. 7478 of August 14, 1925, as amended by Excise Notifications Nos. 180, 187, 194, 221, 225 and 231, I have appointed the undermentioned date, time and place for recording the votes for the purpose of ascertaining whether 60 per cent of the voters in the final list of voters are in favour of opening with effect from 1st October, 1956, an Arrack Tavern at Soranpattu in the Divisional Revenue Officer's Division of Pallai in the Jaffna District.

Name of Tavern:—Arrack Tavern Soranpattu.

Date:—28-1-56.

Time:—8 a.m. to 12-00 noon and 1 p.m. to 6 p.m.

Place (Polling Station):—Ghanesha Vidyasalai School, Soranpattu.

Villages or other divisions assigned to the Polling Station:—Soranpattu, Masar and Tharmakerny.

**M. Sri Khanta,**
Government Agent,
Jaffna District.

The Kachcheri,
Jaffna, 10-12-55.

# பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

இலங்கைப் பாடசாலைகளின்
உபயோகத்திற்காக
விசேஷமுறையில் எழுதப்பட்டது.

### கத்தோலிக்க வாசகம்

| | | ரூ. ச. |
|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | 50 |
| மேற் பிரிவு | ... | 50 |
| இரண்டாம் புத்தகம் | ... | 60 |
| மூன்றும் புத்தகம் | ... | 70 |
| நாலாம் புத்தகம் | ... | 80 |
| ஐந்தாம் புத்தகம் | ... | 90 |

### கணிதம்
(எஸ். ஏ. எற்வேட்)

### எண் கணிதம்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 1-25 |
| மூன்றும் வகுப்பு | ... | 1-50 |
| நாலாம் வகுப்பு | ... | 1-75 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 1-90 |
| ஆறும் வகுப்பு | ... | 2-00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2-25 |
| எட்டாம் வகுப்பு | ... | 2-50 |

### மனக்கணிதம்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 50 |
| மூன்றும் வகுப்பு | ... | 60 |
| நாலாம் வகுப்பு | ... | 70 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 80 |
| ஆறும் வகுப்பு | ... | 1-25 |

### வீச கணிதம்

| | | |
|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2-50 |
| இரண்டாம் பாகம் | ... | 2-50 |
| மூன்றும் பாகம் | ... | 3-00 |

### கேத்திர கணிதம்

| | | |
|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2-50 |
| இரண்டாம் பாகம் | ... | 3-00 |
| மூன்றும் பாகம் | ... | 3-00 |

### நவமணி வாசகம்

| | | |
|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | 50 |
| மேற் பிரிவு | ... | 50 |
| இரண்டாம் வகுப்பு | ... | 60 |
| மூன்றும் வகுப்பு | ... | 70 |
| நாலாம் வகுப்பு | ... | 80 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 90 |
| ஆறும் வகுப்பு (தற்போது இல்லை) | | |
| ஏழாம் வகுப்பு | ... | 1-00 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு

# தாண்டவன்வெளித் தபால்

## அர்ச். சவேரியார் சேவாசங்க 3-வது ஆண்டு விழா

மட்டக்களப்பு, தாண்டவன் வெளி அர்ச். வியாகுலமாதாகோயில் பங்கைச் சேர்ந்த அர்ச். சவேரியார் சேவாசங்க அங்கத்தினர் அர்ச். சவேரியாரின் திருநாளன்று தங்கள் 3-வதுஆண்டுவிழாப் பூர்த்தியை விமரிசையாய்க் கொண்டாடினர்.

திருநாளுக்குமுந்திய ஒன்பதுநாட்களிலும்நவநாள்உற்சவம் நடாத்திமுடிவு தினம் ஒரு சந்தியாயிருந்து அன்றுபி.ப. 6-30 மணிக்கு மாலைஆராதனையும், சற்றுப்பிரகாரமும் நடாத்தினர். திருநாளன்றுகாலை பூசைக்குமுன் புதியஅங்கத்தவர்களாகச் சகோதரி மாக்கிறேற் சவரிமுத்து, சகோதரர் திரு. பி. டி. வெஞ்சமின், ஜி. இம்மனுவேல், கே. அல்பிறெட் என்பவர்கள் சேர்ந்து, கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களிடம் தங்கள் வாக்குறுதியைக் கொடுத்துச் சின்னமும் பெற்றுக்கொண்டனர். பாடற்பூசையின் பின் கட்டளைக் குரவரும் ஏனையஅங்கத்தினர்களும் காலைப்போசனம் அருந்தினர். பி. ப. 5 மணிக்குத் தேநீர் விருந்தில் கலந்துகொண்ட பின் கடவுள் வணக்கத்துடன் கூட்டம்ஆரம்பமானது. முறையே கூட்ட அறிக்கைகள், வரவுசெலவுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாய்ஏற்றுக்கொள்ளப்பட்டபின் புதியவருட உத்தியோகத்தரின்தெரிவு நடைபெற்றது. தற்காலிகதலைவராக விருந்தினர் திரு. கே. ஆர். அகுஸ்தீன் (வின்சென்ற் டீபோல் சபை அக்கிராசனர்) தலைமைவகித்தார். சகோதரர்கள் தலைவர், எஸ். சவரிராசா, உபதலைவர், எஸ். ஈ. அன்ரனி, தனாதிகாரி, ஜி. இம்மனுவேல் என்பவர்களும், சகோதரிகள் காரியதரிசி மேரிவெஞ்சமின், உபகாரியதரிசி சிசிலியாஅந்தோனிப்பிள்ளை என்பவர்களும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். ஈற்றில் வண. கட்டளைக்குரவர் கடந்த வருடச்சேவைக்காக நன்றியும், வருங்கால திட்டங்களையும் கூறியபின் விழா இனிதே முடிந்தது.

—நிருபர்.

## நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் கருணை நிறைந்த இரக்கத்தினாலும், அர்ச். சூசையப்பர். அந்தோனியார், இசிதோர் இவர்களினது மன்றாட்டினாலும், ஊறணி, அர்ச். அந்தோனியார்கோவில் கட்டளைக் குரவராகிய வண. ஜே. ஏ. இராசநாயகம் சுவாமியார் எனதிகவலைகுறித்துச் சற்பிரசாதநாதரையும், சகாயமாதாவையும் வேண்டிக்கொண்டதன்பயனாலும் எனது வீட்டில் களவுபோன பெருந்தொகைப் பெறுமதியான நகைகள் எனக்கு மறுபடி கிடைத்தன. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

ஊறணி ம. இராச்சினியம்மா

# கல்லாற்றுக் கடிதம்

## பங்குக்குருவின் தினவிழா

கல்லாறு, அர்ச். அருளானந்தர்கோவில் கட்டளைக்குரவர் வண. பிரான்சிஸ் செலர்சுவாமியவர்களின் பேர்கொண்ட தினவிழா கல்லாற்றுத் தமிழ்ப்பாடசாலைஆசிரியர், மாணவர், மாணவிகளால் 2-12-55 வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. அவர்கள் சுவாமியாரை அவரதுஇல்லஞ்சென்று மாலைசூட்டிப் பாடசாலைக்கு அழைத்துவந்து உயர் ஆசனத்தில் அமரச்செய்தனர். பின்னர் தலைமைஆசிரியர் என். எஸ். தங்கராசா அவர்கள் சுவாமியவர்களைப்பற்றியும், அவர்பாடசாலைக்குச் செய்துள்ள தொண்டுகள்பற்றியும் ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்மேல் சுவாமியவர்கள் பாடசாலைமாணவர், மாணவிகள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்றும், கூடியவரையிலே நாட்பூசைகாணத் தெண்டிக்கவேண்டுமென்றும் கூறிநின்றார். பின்னர் மாணவர்மாணவிகள் சுவாமியாருக்கு அன்பளிப்புகள் அளித்தனர். தாம் பேர்கொண்ட சுபதினவிழாவை முன்னிட்டு அன்றுபாடசாலைக்கு அவர்விடுதலையும்வழங்கினர். விழாவுக்குரியநாள் 3-12-55 சனிக்கிழமையாதலால் முதல் நாள் வெள்ளிக்கிழமை விடுதலைநாளாயிற்று.

சவேரியார் திருநாள்: கல்லாறு, அர்ச். சவேரியார் பத்திச்சபை வாலிபர்களால் 3-12-55 சனிக்கிழமை அர்ச். சவேரியார்திருநாள் அர்ச். அருளானந்தர்கோயிலில் கொண்டாடப்பட்டது. சனிக்கிழமைமாலை 6 மணிக்குத் திருச்செபமாலை, பிரார்த்தனையின் பின் கட்டளைக்குரவர் வேஸ்பர்பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினார். அதன்மேல் அர்ச். சவேரியாரின் திருச்சுரூபம் கோயிலைச்சுற்றிப் புதிதாகஅமைத்த பாதைவழியாகப் பக்தர்கள் பந்திபந்தியாய்ச்செல்ல, கீதங்கள் யாவரையும் பக்தியில்ஆழ்த்த, சுற்றுப்பிரகாரமாகக்கொண்டு போகப்பட்டது. அடுத்தநாள்ஞாயிறுவாரம் பெரியபாடற்பூசையுடன் திருநாள் இனிதேமுடிந்தது.

—நிருபர்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயத்தாயின் கருணையாலும், அர்ச். ஸ்நாபகஅருளப்பரின் மன்றாட்டினாலும் எவ்விதசிகிச்சைக்குமேகுணமுறாத பாரியவியாதியினின்றும் எனது மகன் குணமாக்கப்பட்டான். அவர்களின் நாமம் புகழப்படுவதாக. நன்றியறிதலாக இதைப்பிரசுரிக்கிறேன்.

நீ. றெபேக்கா

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பதினொன்றுவயது நிரம்பிய எனதுமகள் மேரி புஷ்ப லீலா கடுமையான வருத்தங் கண்டு எவ்விதசிகிச்சைக்குங் குணமுறாது இருப்பதுகண்டு கடைசியாகச் சதாசகாய மாதாவில் நம்பிக்கைவைத்து அவவின் கருணையை இரந்துநின்றேன். அதிசயவிதமாக மகள் ஆரோக்கியம் அடைந்தாள். நன்றியாக அருள்நிறைந்த அமலதாயின் மகிமையை உலகிற்கு அறியப்படுத்துகின்றேன்.

குருநகர், ஏ. சுவாம்பிள்ளை
யாழ்ப்பாணம்.

# பரிசளிப்பு விழா

உயிலங்குளம், கத்தோலிக்க கனிஷ்டபாடசாலைப் பரிசளிப்புவிழா சென்ற 9-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை மன்னார்–மாதோட்ட மூப்புச் சுவாமியார் அதிவண. ஜே. நீக்கலஸ் சுவாமியவர்கள்தலைமையில் அதிபரிமளிப்பாக நடந்தேறியது. அவ்வேளை தலைவர்சுவாமியவர்கள் தமது முன்னுரையிலே: இப்பாடசாலை துரிதமாக முன்னேற்றம் அடைந்துவரக் காண்பது தமக்குப்பெருஞ் சந்தோஷமென்றும், ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சியைக் கவனித்து அவர்களுடன் பெற்றோரும் ஒற்றுமைபூண்டு ஒத்துழைப்பின் இக் கனிஷ்டபாடசாலை சிரேஷ்டபாடசாலையாகினும் ஆகலாமென்றும், பாடசாலையின் தீவிரவளர்ச்சியைச் சாதிசமய பேதமின்றி ஆயிரக்கணக்கானமக்கள் இங்கு குழுமியிருப்பதே நன்கு புலப்படுத்துகிறதென்றும் கூறிநின்றார். பின்னர் தலைமையாசிரியர் படித்தஅறிக்கையிலே பாடசாலை தீவிரவளர்ச்சியடைந்து இப்போது ஓர்கனிஷ்ட பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டு, முதல்முறையாகச் சென்றகார்த்திகைமாதம் சிலமாணவர்களை ஜே. எஸ். சி. பரீட்சைக்கு அனுப்பி நூற்றுக்குநூறுவிகிதம் சித்தியடையச் செய்துள்ளதென்றும் குறிப்பிட்டார். அதனைத்தொடர்ந்து ஆசிரியர் வி. ஆர். டோமினிக், மன்னார்வட்டார வித்தியாதரிசி எம். குணரத்தினம், ஆசிரியர் எஸ். பர்ணபாஸ், கட்டளைக்குரவர் வண. எஸ். கோமஸ்சுவாமியார் ஆகியோரால் அரியசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி, வகுப்பில் முதலிடம், திவ்வியபூசைக்கும், பாடசாலைக்கும் ஒழுங்கானவரவு என்பவற்றிற்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதன்மேல் மாணவர்களின் ஆடல் பாடல்களும், "வெனிஸ் வர்த்தகன்," "கெட்டகுமாரன்" போன்ற சரித்திர நாடகங்களும் தமிழ், ஆங்கிலமாகிய இருபாஷைகளிலும் சிறப்பாகநடைபெற்றன. ஈற்றில், தலைமையாசிரியர் கூறிய நன்றியுரையிலே, தலைமைவகித்தசுவாமிகளுக்குக் குருத்துவ வெள்ளியூபிலிவிழா வாழ்த்தும், இவ்விழா அத்துணைபெருமிதமாக நடைபெறத் தக்கதாய்த் தம்முடன் ஒத்துழைத்த உதவிஆசிரியர்களான திரு. எஸ். எஸ். பிகுருடோ, செல்வி டி. மேரிதெரேசா, திருமதி. ஏ. பாக்கியம் என்பவர்களுக்குத் துதியும்கூறிநின்றார்.

— நிருபர்

● முறில்லோஎன்ற உலகப்பிரசித்தி பெற்ற சைத்திரிகர் (1617—1689) தேவதாயாரின் அமலோற்பவசம்பந்தமாய் 66படங்கள் சித்திரித்திருந்தார். அவற்றுளெலாம் மகா அலங்காரமானதென்று பெரியசித்திரகாரர்களாலேயே பாராட்டப்பெற்றபடம் தற்போது இரும்புத்திரைக்குப்பின்னால் லெனின் கிறாட்நகர சித்திரப் பொருட்காட்சிச் சாலையில் இருந்துவருகின்றது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 15-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவீரன்

அருமைச் சகோதரங்களே!

தேவசுதன் மனிதனன சம்பவத்தை நாம் எப்படி மதிக்கவேண்டும்?

கடவுள் மனிதனே எவ்வளவாக நேசித்தாரென்றால் அவர் தமது குமாரனை அவனுக்காகக் கையளித்தார். இவ்வித நேசத்தையும் உதார குணத்தையும் வேறெங்காவது காணமுடியாது.

மனிதனுய் அவதரித்த தேவகுமாரன் எம்மை இரட்சிக்க மனமொருமித்தது உதாரம். மனிதசுபாவமெடுத்தது உதார குணம். மாட்டுத்தொழுவத்தில் பிறந்ததும், ஏழையாய்ச் சீவித்ததும், திருப்போதகம் அருளினதும், திருஉதிரஞ் சிந்தி உயிர்ப்பலியானதும் உதார மன்றோ!

ஆகையால், யேசு எம்மை நேசித்தது போல நாமும் அவருக்காகப் பிறரை நேசிக்கவேணும், இந்தநேசம் சொல்லிலும் செயலிலும் விளங்கவேண்டும்.

இந்த நத்தால் காலத்திலே நீங்கள் பிறர் அன்பில் வளரவேண்டும். நீங்கள் பலவெகுமதிகளை உங்கள் பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள். அவைகளை விலைகொடுத்து வாங்கும்பொழுது நீங்கள் அறிந்த ஓர் ஏழைப் பிள்ளைக்கும் ஒரு வெகுமதி கொடையாய் வாங்கிக் கொடுக்கலாம். புது உடைகள் வாங்கும் பொழுது உங்களிடமுள்ள நல்லஉடை ஒன்றை ஓர் ஏழைக்குடும்பத்துப் பிள்ளைக்குக் கொடுக்கலாம். பிள்ளைகள் பலர் சேர்ந்து கூத்து, நாடகங்கள் முதலியன நடித்துப் பிறரைமகிழ்விக்கலாம். இவ்விதமாய் உங்கள் அன்பு உதாரமடையட்டும். சுபம்!

உங்கள் அன்புள்ள,

**அண்ணு.**

---

## அண்ணாவி அந்தோனிக்குட்டி

அண்ணாவி அந்தோனிக் குட்டியென்னும்
அருந்தமிழ்ப் புலவனை யறியாருண்டோ!
கண்ணனை தீந்தமிழ்க் கவிதை பாடிக்
கர்த்தனைப் போற்றிய வித்தகனே.

●

ஆணிப்பொன் போன்றிடும் பாவலவர்
அந்த வரிசையில் வந்தவனே
காணிக்கைத் தீந்தமிழ்க் கீதமதால்
கற்றோர் உளத்தைக் கவர்ந்தவனே!

●

பாரிலே அந்தோனியாரின்மீது
பக்தியாய்ப் பாடிய பாடல்களோ
நேரிலே பாய்ந்திடும் நீர்ச்சுனைபோல்
நின்று பெருகிடும் என்றென்றுமே.

●

சிந்தை கவர்ந்திடுஞ் சீலரவர்
சிரித்த நற்கவிப் பாவலவர்
சொந்தக் கவிச்சுவை வெள்ளமதில்
தோய்ந்துநீ ராடியே பாடுவமே.

"கோசுதா"
மேல் ஆந்திறு பிளேஸ்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா ?

1. இடியா, மின்னலா முதல் நடைபெறுவது ?
2. ஒரு பொருளைப் பிரித்துப் பிரித்துக் கடைசியில் பிரிக்கமுடியாத பாகத்தை எவ்வாறு அழைக்கிறோம் ?
3. வெயிலைக் கண்டு ஒளிப்பது என்ன ?
4. பூமியின் கன அடக்கம் யாது ?
5. இலங்கையில் உயரப் பாய்தலில் புதியதோர் சாதனையை ஈட்டிய வீரன் யார் ?
6. ஐரோப்பாவின் "விளையாட்டிடம்" எது ?
7. பாகிஸ்தான் சிருஷ்டிப்பின் மூலகர்த்தா யார் ?
8. முதலாவது உலகப் பெரும்போர் நடைபெற்ற ஆண்டு, மாதம், திகதி என்பன யாவை ?
9. சிறுவரின் தோழர்என்று அழைக்கப்படும் பாப்பானவர் யார் ?
10. ரேடியம் என்னும் உலோகம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது ?

---

## அந்தநாள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அக்கா! இன்று மார்கழி 24-ந் தேதி அல்லவா? ஒரு விசேடத்தை மறந்துவிட்டீர்களல்லவா? என ஏதோ ஒருசமாச்சாரத்தை மனதிற் பதுக்கிக் கொண்டு வினவினன் ஜேம்ஸ்.

நீற்ரு சிந்தனையைக் கிளறினள். அவன்கூறிய விசேடம் அவளுக்குப் புலப்படவில்லை. அவளது தோல்வியை முகம் பிரதிபலித்தது.

ஜேம்ஸ், "அக்கா! இன்று நமது புனிதவீரர் பிறப்பின் ஆயத்த நாளல்லவா ?" என்று மகத்தான ஒரு சேதியை வெளியிட்டான். உடனடியாக அவள், "வா தம்பி ! நாம் இன்று வெள்ளெனவே போய்ச்சேரவேண்டும். நமது இனிய யேசு நமதுவரவை எதிர்பார்த்திருப்பார். பீடச்சோடிப்புக்குச் சில நிமிடநேரமாவது செலவாகும். ஆதலின் நடையைத் தீவிரப்படுத்த வேண்டும்" என்ருள்.

ஓட்டமும் நடையுமாகப் புனிதவீரர் பதியடைந்தனர் நமது பாலியப் புனித வீரர்கள். என்னஅற்புதம்? பீடம் முழுமையும் ஒளிப்பிரவாகமாகத் தென்பட்டது. என்றுமில்லாத காட்சி அன்று காணக்கூடியதாக இருந்தது. மற்றநாட்களில் எவ்வளவு மலர்கள் வைத்தாலும் இவ்வளவு எழில்தருவது சந்தேகம். அவ்வளவு மனோரம்மியமாக இருந்தது. பாலியரின் மனங்கள் குதூகலித்தன. பனிக்கட்டிகள் நெஞ்சுட் பொதியப்பட்டதுபோன்ற குளுமையான உணர்வு அவர்களுக் கேற்பட்டது. நாதன்யேசு விரும்புவது நல்லமலர்கள் அல்லவென்பதற்கு அன்றையப் பீடம் சாட்சிபகர்ந்தது. தம்பி! பீடத்தில் மலர் இல்லாவிட்டாலும் மாட்சியைப் பார்த்தாயா? என்ருள் நீற்ரு. அக்கா,

"வெள்ளை நிறமல்லிகையே
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரேதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனர் வேண்டுவது — என

நாம் பாடசாலையிற் படித்த பாடலை மறந்து விட்டாயா ?" எனக் கேட்டான் ஜேம்ஸ். அந்தநாள் உண்மையுணர்வு பெற்ற உன்னத நாளாக இருந்தது இவ் விளம் பாலருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பிள்ளை

நாலந்தை என்னும் ஊரிலே கத்தோலிக்க குடும்பத்தில் மலர் பிறந்தாள். அவள் நல்லபிள்ளையாக வரவேண்டும் என்று பெற்றோர் விரும்பினர். அதனால் அவளுக்கு வேண்டியசலுகைகளைக் கொடுத்து வளர்த்தனர். அத்துடன் ஞான அறிவையும் சிறுவயதிலேயே ஊட்டினர். இதனால் சிறுவயதிலேயே அவள் ஞானக்கடமைகளை நன்கு அநுசரித்து வந்தாள். பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பிலும் ஞானோபதேசப் போட்டிப்பரீட்சையில் முதற்பரிசுபெற்றாள். அதுமட்டுமன்றி ஆசிரியர்களது அன்புக்கும் பாத்திரமானாள். பாடசாலையில் ஆசிரியர்க்குப் பணிந்து நடந்தாள். இன்னும் சகமாணவ மாணவிகட்கும் சரீரஉதவி, போன்ற பிறர்சிநேகக் கிரியைகளைச் செய்து வந்தாள். ஞானக் கடமைகளிலும் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக விளங்கினாள். அதனால் மற்றப் பிள்ளைகளும் அவளைப் பின்பற்றி நல்லபிள்ளைகளாக நடந்தனர் இவள் வளர்ந்து இறுதியில் ஒரு சிறந்த ஆசிரியையாக மாறினாள். ஆசிரியையாய் வந்ததும் பிள்ளைகள்மேல் காட்டவேண்டிய அன்பையும், அநுதாபத்தையும் காட்டிப் பிள்ளைகளை நல்ல கத்தோலிக்க பிள்ளைகளாக வளர்த்தாள். அதனால் இன்னும்பல அப்போஸ்தலிக்கத் தொண்டு செய்துவந்தாள். சிலவருடங்கள் சென்றதும் அவளுக்கு ஓர் கொடிய நோய் உண்டாகியது. அதன்காரணமாக அவள் மோட்சஇராச்சியமடைந்தாள். இறக்கும்போது அவள் "யேசுவே, என்னை இரட்சியும்" என்று கூறினாள்.

பிள்ளைகளே! மலர் எவ்வாறு உண்மைக் கத்தோலிக்க பிள்ளையாகச் சீவித்து நற்கதியடைந்தாளோ, அதுபோலநீங்களும் நடக்கத்தெண்டியுங்கள்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

# காட்டுக் காட்சி

காலமோ! வசந்தகாலம். நேரமோ! மாலைநேரம். இயற்கை யன்னையின் வனப்பைக்காணவேண்டி, நானும் என் நண்பனும் காட்டுப்பக்கம் புறப்பட்டோம். சாயங்காலம் நாலுமணியிருக்கும், அண்மையில் உள்ள காட்டை நோக்கி நடந்தோம்.

எங்களை வாவென்று அழைப்பது போல, மெல்லிய இளந்தென்றல் "ஜில்" லென வீசிற்று. காய்த்துப் பழுத்த மரக்கொப்புகள் தலைசாய்ந்து உபசரித்தன. பச்சைப்பசேலெனப் படர்ந்த செடி கொடிகள், இயற்கையன்னையின் பச்சைநிறப் பட்டாடைபோல் மிளிர்ந்தன.

நாம் இருவரும் சற்றுத்தூரம் நடந்து சென்றோம். மானும் மயிலும் மகிழ்ந்து விளையாடும் மற்றொரு காட்சியைக் கண்டோம். இன்னொருபுறம் குயில்கள் கூவின. மற்றும் பட்சிசாலங்கள்யாவும் தத்தம் குஞ்சுகளுடன் மழலைமொழி பேசி மகிழ்ந்துவிளையாடின. இன்னும் சற்றுத்தூரம் நடந்தோம்.

சிறியதோர் மலைச்சாரல். அதிலிருந்து சலசலவென ஓடிக்கொண்டிருந்தது நீரோடை. சுற்றிலும் புஷ்பச்செடிகள். அதிலிருந்து வீசும் சுகந்தவாசனை. மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலாம் மலர்களில் தேன்சேர்க்கும் வண்டுகள். அவற்றின் ரீங்காரஓசைமுற்றிலும் மனதிற்குரம்மியமா யிருந்தது. என்னே அழகு! என்னே ஆனந்தம்! எவ்வளவு அற்புதம்!

தலைநிமிர்ந்து பார்த்தோம். அந்திமாலை ஆறுமணியிருக்கும் என்பதை, செடிகொடிகளினூடே செவ்வானம் சிரித்துக்காட்டிற்று. கங்குல் சூழ்ந்தது. இனித் தாமதிக்கமுடியாதபடியால் நாம் இருவரும் எமதுவீட்டை நோக்கி நடந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனின் மனமாற்றம்



ஒரு சிறுவன் வேலையின்றித் தனது கிராமத்துத் தெருக்களில் மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தான். அவன் வறிய குடும்பத்திற் பிறந்தவனாகையால் எங்காவது ஒரு பைநிறையப் பணத்தைக் காணமாட்டேனா! என்று சதா எண்ணிககொண்டிருந்தான்.

ஒருநாள் தெருக்களைக்கடந்து ஊரோரத்தில் உள்ள காட்டை அடைந்தான். காட்டுச் சிறுவழியிலே நடக்கும்போது ஒருபெரிய பணப்பையை அவன் கண்டான். அது ஒரு செல்வனுடையது. கள்வர் அவனை வழிமறித்து அடித்துக் காயப்படுத்தி விட்டனர். அரச சேவகர் கள்வரைத் தொடர்ந்தனர். செல்வன் மயக்கந் தெளிந்து கண்திறந்து இங்கும் அங்கும் பார்த்தான்.

பணப்பையைக் கையில் எடுத்துக்கொண்டு சிறுவன் ஓட எத்தனித்தான். அப்பொழுதுதான் சிறிது உணர்ச்சி பெற்றசெல்வன் "தண்ணீர், தண்ணீர்" என்று மெல்லச்சொன்னான். இக்குரலைக் கேட்ட சிறுவன் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாமல் நின்றான். பிறகு நடுக்காட்டில் ஒரு வருத்தக் குரல் கேட்கும்போது அதனைக்கவனியாதுபோவது குற்றமென்று எண்ணினான். செல்வன் இருக்கும் நிலையைக்கண்டு பெரிதும் மனம் இரங்கி அருகில்உள்ள சிறுகுளத்திலிருந்து இலைப்பாத்திரத்தில்கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து செல்வனின் மயக்கத்தைத் தெளிவித்தான். செல்வன் தான்பட்ட பாடுகளை மெல்ல, மெல்ல ஒவ்வொரு வார்த்தையாகச் சொன்னான். அதைக்கேட்ட சிறுவன் கண்ணீர் உகுத்தான். தன்கையில் இருந்த பணப்பையைச் செல்வனிடமே கொடுத்தான்.

இதற்குள் சேவகர் கள்வர்களைப் பிடித்துக்கொண்டு திரும்பிவந்தனர். அவர்கள் சிறுவன் உதவியால் செல்வன் உயிரோடிருப்பதுகண்டு அவனையும், செல்வனையும் எடுத்துக்கொண்டு ஊருக்குள் நுழைந்தனர். திருடர் தண்டிக்கப்பட்டனர். செல்வன் பலநாள் படுத்த படுக்கையாய் இருந்தான். சிறுவன் அவனுக்கு அருகில் உபசாரம் செய்துகொண்டிருந்தான். இரண்டு மாதங்களின்பிறகு செல்வன் ஒருவாறு சுகம்பெற்றுச் சிறுவனைப் பார்த்து அவன் அங்குவந்த வரலாற்றை விசாரித்தான். பிறகு உண்மையைத்தெரிந்துகொண்டு சிறுவனுக்கு ஒருபணப்பை கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினான். சிறுவனும் பிறகு நால்வாழ்வு வாழ்ந்து பெருஞ்செல்வன் ஆனான்.

ஜெயமணி தேவசகாயம்,
சூராவத்தை,
சுன்னுகம்.

---

## —: விகடம் :—

ஜீவகாருண்யத்துக்கும், சகோதர வாஞ்சைக்கும் உள்ள வித்தியாசத்தை மாணவர்களுக்கு விளக்கிக் கூறிய பின்னர், "ஒரு கிழட்டுக்கழுதையை வண்ணான் அடித்தால் நான் பார்த்துக் கொண்டு நிற்பேனா?" என்று ஒரு கேள்விபோட்டார் ஆசிரியர்.

"மாட்டீர்கள்" என்றான் ஒருமாணவன்.

"என்ன செய்வேன்?"

"வண்ணானுக்குப் புத்திபோதித்துக் கழுதையைத் தடவிக் கொடுப்பீர்கள்."

"எதனால்?"

"சகோதர வாஞ்சையினால் வாத்தியாயர்"

---

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள் :

**"அண்ணா", சஞ்சூசையப்பர் தாபனம்,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org